பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 04 வியாழக்கிழமை 16.02.2023 கதிர் 100

இது ரகசியம் அல்ல!

தமிழ்நாட்டின், நாகைக் கரையோரம் சீனா நாட்டு எரிவாயு சிலிண்டர் மீட்கப்பட்டிருப்பது அந்த நாட்டு அதிகாரிகளுக்குப் புதிய தலையிடியைக் கொடுத்திருக்கின்றது.

இரும்பு உள்ளிட்ட உலோக ஒட்டு

☞2

# நாகை கரையில் மீட்கப்பட்ட சீனச் சிலிண்டரால் பரபரப்பு

## தென்னிந்திய கரையோரங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்; அதிகாரிகள் தீவிர விசாரணை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.15

இந்தியாவில் தடை செய்யப்பட்ட, சீனாவில் மட்டுமே பயன்படுத்தும் வெற்று காஸ் சிலிண்டர் ஒன்று தமிழகம் நாகை மாவட்டத்தில் மீட்கப்பட்டது இந்திய பாதுகாப்பு வட்டாரங்களின் உயர் மட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அது பற்றிய தீவிர விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

☞2

பிந்திய செய்தி

# இந்திய மீனவர்கள் மீது நடுக்கடலில் தாக்குதல்

## ஒருவரின் மூன்று விரல்களும் துண்டிப்பு





இந்திய - இலங்கை கடல் எல்லையை யொட்டி நேற்றிரவு மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது திடீரென வாள்களுடன் வந்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் இந்திய மீனவர்கள் நால்வர் படுகாயமடைந்தனர். ஒரு மீனவரின் மூன்று விரல்களும் துண்டிக்கப்பட்டுள்ளன.

சிறிய 3 படகுகளில் வந்த 10 பேரே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்று இந்திய மீனவர்கள் தெரிவித்தனர். படுகாயமடைந்த இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கரைதிரும்பியதை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தி ஐ.நாவிடம் கோரிக்கை

இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசமைப்புக்கு முரணான வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் தொடர்பில்

☞2

# உரிய திகதியில் தேர்தலை நடத்தக் கோரி திங்கள் கொழும்பைச் சுற்றிவளைப்போம்

## சஜித் அணி அழைப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய திகதியில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பில் மாபெரும் போராட்டத்தை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இதன்படி நிதி அமைச்சுக்கு முன்பாகவும், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும்

☞2

# தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டபடி நடக்கலாம்

## தேர்தல் ஆணைக்குழு நம்பிக்கை




உள்ளூராட்சி சபைத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பைத் திட்டமிட்டவாறு எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடத்துவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்று தேசிய

☞2

# 4 பொலிஸாருக்கு தூக்கு தண்டனை அம்பாந்தோட்டை நீதிமன்றம் விதித்தது

திஸ்ஸமஹாராமவில் சூதாட்ட நிலையம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது நபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் நேற்று தூக்குத் தண்டனை விதித்தது.

திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட

☞2

# ஐக்கிய மக்கள் சக்தியும் சமஷ்டிக்கு கடும் எதிர்ப்பு

## லக்ஸ்மன் கிரியெல்ல விளக்கம்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முழுமையான ஆதரவை நாம் தெரிவித்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியிலும் சமஷ்டி தீர்வுக்கு ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டாது.

☞10

# யாழ். பொலிஸார் 2 பேருக்கு தண்டனை இடம்மாற்றம்

## முன்னணியினரை சிறையில் செல்பேசி பயன்படுத்த விட்டதற்காக

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.16

பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த கைதிகளை செல்பேசி பயன்படுத்த அனுமதித்தார்கள் என்கிற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸாருக்குத் தண்டனை இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்புக் காவலில் இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செல்பேசிகளை

☞10

# கண்டியில் குடியரசு பெரஹரா ரணிலின் கோரிக்கைக்கு ஏற்ப

## 34 வருடங்களின் பின்னர் நடத்த திட்டம்



அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையை அடுத்து கண்டி தலதா மாளிக்கையில் இந்த முறை குடியரசு பெரஹரா நடத்தப்படவுள்ளது. 34 வருடங்களுக்குப் பின்னர் இத்தகைய பெரஹரா நடக்கவுள்ளது. பெப்ரவரி 19ஆம் திகதி புனித தந்தம் இன்றி இந்த ஊர்வலத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

☞10

# சிறுபிள்ளைத்தனமாக செயற்படுகின்றது அரசு

## டலஸ் எம்.பி. சாடல்



தேர்தல் விடயத்தில் அரசு சிறுபிள்ளைத்தனமாகச் செயற்படுகின்றது என்று சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சுதந்திர தேசிய முன்னணியின் கொழும்பு அலுவலகத்தில் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில்

☞10

# சிவாஜி திடீரென சென்னை பயணம்



யாழ்ப்பாணம், பெப்16

தமிழ்த் தேசிய கட்சியை சேர்ந்தவரான எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னைக்கு திடீரெனப் பயணித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிரோடு நலமாக இருக்கின்றார் என

☞10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் இந்த சிலிண்டரைப் பயன்படுத்துவது இந்தியாவில் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. அதிகாரிகள் அச்சப்படுவதற்கு அது மட்டுமே காரணமில்லை.

இந்த எரிவாயுவை குறைந்த தாக்க உயிரி ஆயுதமாகக்கூட (பயோ வெப்பன்) பயன்படுத்த முடியும் என்கிற ஆபத்துத்தான் அதிகாரிகளைக் கதிகலங்க வைத்திருக்கிறது.

சீனாவில் இருந்தோ, அல்லது கடல் வழியாகப் பயணிக்கும் கப்பல்களில் இருந்தோ இது இந்தியக் கரையை வந்தடைந்திருக்க முடியாது என்று இந்திய அதிகாரிகள் திடமாக நம்புகின்றார்கள். இலங்கையில் இருந்துதான் இது தமிழ்நாட்டுக் கடற்கரைக்கு எடுத்து வரப்பட்டிருக்க முடியும் என்பதும் அவர்களின் ஆழமான நம்பிக்கை.

இலங்கை எல்லோருக்கமாகத் திறந்துவிடப்பட்டிருக்கும் நிலையில் அது தமக்கு ஏற்படுத்தியிருக்கும் பேராபத்தின் உண்மையை இப்போது இந்திய அதிகாரிகள் உணரத் தலைப்படுகிறார்கள். போர்க் காலத்தில் அவர்களுக்கு இவ்வளவு ஆபத்து இருந்ததில்லை.

தமிழ்நாடுக் கரைகளில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எரிபொருள், மருந்து, அவ்வப்போது ஆயுத தளபாடங்கள் என்பன அனுப்பப்படுவதைத் தடுப்பது மட்டுமே அவர்களின் தீவிர நடவடிக்கையாக இருந்தது. ஆனால் இப்போது – ஆபத்து உள்நுழைவதற்கான திறவுகோலாக இலங்கை மாறியிருக்கும் நிலையில் தென்பகுதியில் நீண்டு கிடக்கும் மிகப் பெரிய கரையோரத்தை எப்படிப் பாதுகாப்பது என்று கேள்வி அதிகாரிகளுக்கு எழுந்துள்ளது.

கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும் புலனாய்வு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்குமான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளார்கள். இதற்காக துறைசார் விற்பனர்களான காவல் துறை அதிகாரிகளை உடனடியாக கரையோரக் காவல் நிலையங்களுக்கு இடம்மாற்றும்செயற்பாடுகளும்தொடங்கப்பட்டுள்ளனவாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தவரை அவர்கள் இந்தியாவிற்கு அச்சுறுத்தல் என்று வசைபாடிக்கொண்டிருந்த இந்திய அரசியல்வாதிகளும் ஆய்வாளர்களும் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்? புலிகள் இந்தியாவின் பாதுகாப்பாக இருந்தார்கள் என்றா அல்லது அச்சுறுத்தல் என்றா?

*****

அண்மையில் யாழ்ப்பாண கலாசார நிலையம் மக்களுக்கு உரித்தாக்கப்படும் நிகழ்வு நடந்தது. இலங்கையின் 75ஆவது சுதந்திர தின நகழ்வின் ஓர் அங்கமாகத்தான் கலாசார மண்டபத்தை மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் சுதந்திரதின நிகழ்வுகளைப் புறக்கணிப்போம் என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் செய்தியாளர்களைச் சந்தித்தபோது பெரும் ஆரவாரமாக அறிவித்திருந்தார். தாம் சார்ந்திருக்கக் கூடிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (இந்தக் கூட்டணியின் எந்தவொரு முடிவும் அனைத்துத் தலைவர்களும் கூடிப் பேசித்தான் அறிவிக்கப்படும் என்று அதன் தொடக்க அறிவிப்பு நிகழ்வில் சொல்லப்பட்டது. ஆனால், இந்த முடிவைத் தலைவர்கள் எங்குகூடி எப்போது பேசி எடுத்தார்கள் என்பது தெரியவில்லை; அப்படி ஒன்று நடந்ததற்கான தகவலும் இல்லை) அதுபோலவே சுதந்திரதினத்தை கரிநாள் என்று புறக்கணித்திருந்தது தமிழ் அரசுக் கட்சி. மட்டக்களப்பில் நேரு – காந்தி – நேதாஜி குல்லாப் போராட்டம் எல்லாம் நடத்தப்பட்டது.

அப்படியிருந்தும் இந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாண கலாசார நிலையத்தை மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்வில் கலந்துகொண்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் தலைகளை நிகழ்விடத்தில் காணக்கிடைத்தது. எதிர்த்தவர்கள் எங்கே இங்கே என்று விசாரித்தபோது, நிகழ்வுக்கு முதல் நாள் இரவு நடந்த விருந்து குறித்து தகவல் கிடைத்தது.

யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமாக வேண்டிய கலாசார நிலையத்தை மத்திய அமைச்சர்கள் அபகரிக்க முற்படுகின்றார்கள், மாநகர சபையைப் புறக்கணிக்கிறார்கள் என்று முதல்வர் ஆனல்ட் பதற்றப்பட்டுப் பறந்தடித்துக்கொண்டு திரிந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் எப்படி அதில் பங்கேற்றார்கள் என்று பார்த்தால், எல்லாம் அண்ணாமலையாரின் ஏற்பாடுதானாம்.

முதல் நாள் இரவு விருந்தில் கலந்துகொண்டபோது நிகழ்வைப் புறக்கணிக்கும் யோசனையோடு தாம் இருப்பதை எங்கள் தலைவர்கள் பா.ஜ.க. தமிழ்நாடு தலைவர் அண்ணாமலையின் காதுகளில் போட்டிருக்கின்றனர். பதறிப்போன அவரோ, ஐயையோ அப்படி ஏதும் செய்துவிடாதீர்கள், நீங்கள் அப்படிப் புறக்கணித்தால் இந்தியா யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையத்தை அமைத்து அதனைச் சிங்களவர்களின் கைகளில் கொடுத்துவிட்டது என்று என்னை அங்கே (தமிழ்நாட்டில்) துவைத்துக் காயப்போட்டுவிடுவார்கள், அது பெரிய பிரச்சினையாகிவிடும், அதனால் நிகழ்வில் கலந்துகொள்ளுங்கள் என்று வேண்டிக்கொண்டார். அத்தோடு நிகழ்வில் மாநகர சபைக்குரிய இடத்தைப் பெற்றுத்தருவதற்கு ஜனாதிபதியுடன் பேசியாவது தான் ஏற்பாடு செய்வார் என்றும் அப்படி ஒரு வேளை அது முடியாமல் போனால் அந்தக் கட்டடம் யாழ்ப்பாண மக்களுக்காகத்தான் இந்தியாவல் அமைக்கப்பட்டது என்பதை அந்த நிகழ்விலேயோ அல்லது தான் புறப்படுவதற்கு முன்பாக யாழ்ப்பாணத்திலேயோ சொல்லிவிட்டுத்தான் செல்வேன் என்றும் உறுதியளித்தார்.

அவரது வேண்டுகோளுக்குப் பின்னர்தான் தமிழ் நாடாளுமன்ற உறுப் பினர்களும் நிகழ்வில் கலந்துகொள்ளும் முடிவுக்கு வந்தனர். அதே பொல தான் வழங்கி வாக்குறுதிப்படி, கலாசார நிலையம் யாழ்ப்பாண மக்களுக்காகத்தான் கட்டப்பட்டது என்று மாலையில் தான் கலந்துகொண்ட கம்பன் விழாவிலே அண்ணாமலையும் அழுத்தம் திருத்தமாகப் பதவு செய்து விட்டுத்தான் கிளம்பிச் சென்றிருக்கிறார்.

- இடிமின்னல் -

## நாகை கரையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலோக ஒட்டு வேலைகளுக்குப் பயன்படும் அசிற்றிலின் எனப்படும் எரிவாயு கொள்கலன் (சிலிண்டரே) தமிழ்நாட்டுக் கரையோரத்தில் மீட்கப்பட்டிருக்கின்றமை பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற கோணத்தில் அதிகாரிகளால் நோக்கப்படுகின்றது.

இந்த சிலிண்டர் எப்போது, எங்கிருந்து, என்ன தேவைக்காக வந்தது என்கிற தகவல்கள் தெரியாதபோதும் இலங்கையில் இருந்தே இது தமிழ்நாட்டுக்கு எடுத்து வரப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேக்கிக்கின்றார்கள்.

எரிவாயு மூலமான உலோக ஒட்டுக்களுக்கு இந்த அஸ்ரலின் வாயு அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக அதிகூடிய வெப்பநிலை தேவைப்படும் பித்தளை ஒட்டுக்கு இந்த வாயு பயன்படுத்தப்படும். எனினும் சீனாவின் இந்த குறிப்பிட்ட காஸ் சிலிண்டர் இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு முன்பே தடை செய்யப்பட்டுவிட்டது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இந்த வெற்று சிலிண்டர் தடை செய்யப்பட்ட காலத்தின் பின்னர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எனவே அது சட்டவிரோதமாகவே நாட்டுக்குள் எடுத்துவரப்பட்டுள்ளது என்று நம்பப்படுவதாக காலைக்கதிர் பத்திரிகையின் செய்தி மூலம் தெரிவித்தது.

சமையல் எரிவாயுவைப் போன்றே அஸ்ரலின் வாயுவும் உலோக ஒட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டாலும் அந்த வாயு வெளியே பரவினால் அது மனிர்களுக்குப் பாதிப்பை, ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடியது. தலைச்சுற்றல், வாந்தி, சுவாசப் பிரச்சினை, வலிப்பு, உயர் குருதி அழுத்தம், இதயப் பாதிப்பு என்பவற்றை ஏற்படுத்தக்கூடியது.

நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம் காவல் சரகம், நம்பியா நகர் மீனவ கிராமத்தின் கடற்கரையில் கிடந்தே இந்த சிலிண்டர் மீட்கப்பட்டுள்ளது. இந்த சிலிண்டர் வெள்ளை நிறத்தில் 3 அடி உயரமும் 2 அடி சுற்றளவும் கொண்டுள்ளது. சுமார் 30 கிலோ நிறை கொண்ட அதன் மீது சீன எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்தே இது கடத்தி வரப்பட்டிருப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன என்று சந்தேகிக்கும் இந்திய அதிகாரிகள், இந்தியாவின் தென்பகுதியிலுள்ள நீண்ட கரையோரங்களுக்கு இதுபோன்ற நடவடிக்கைகளால் கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.

இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த சிலிண்டர் எதற்கு வந்தது எப்படி வந்தது என்கிற விசாரணைகளையும் தீவிரப்படுத்தியுள்ளன.

## ஐக்கிய மக்கள் சக்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தி, கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் கடிதமொன்றைக் கையளித்தது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட்டு, புதிய உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட வேண்டும் எனவும், வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதுடன், எதிர்வரும் தேர்தலில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு இலங்கை மக்கள் மிகவும் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் இருக்கின்றனர்.

ஆனால், இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும், அரசமைப்பின் ஏற்பாடுகளை அப்பட்டமாக மீறும் வகையிலும் மக்களின் வாக்குரிமையை பறிக்கும் வகையிலும் நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்படுகிறது. எனவே இலங்கை ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்த வேண்டும் – என்றார்.

## உரிய திகதியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

தேர்தலை நடத்தாமல் இந்த அரசால் முன்னோக்கிச் செல்ல முடியாது. எனவே, தேர்தல் நடத்தப்பட வேண்டும். திங்கள் கொழும்பைச் சுற்றிவளைப்போம் – என்றும் அவர் கூறினார்.

ஜனநாயகத்தை நிலைநாட்ட விரும்பும் அனைத்துத் தரப்பினரும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் முஜிபுர் ரஹ்மான் மேலும் குறிப்பிட்டார்.

## தபால் மூல வாக்களிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள் ளார்.

தபால்வாக்குச்சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் மாத்திரமே தாமதமடைந்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தபால் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கும் நடவடிக்கைகளை செவ்வாய்க்கிழமை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், நிதி கிடைக்காமை காரணமாக தபால் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதை அரச அச்சகம் நிறுத்தி வைத்துள்ளது.

இதுதொடர்பில்தேர்தல்கள்ஆணைக்குழு மற்றும் அரச அச்சகம் என்பன கலந்துரையாடியுள்ளன.

அதன்படி, எதிர்வரும் சில நாள்களுக்குள் திட்டமிடப்பட்டபடி தபால் வாக்குச்சீட்டுகள் அச்சிட்டுத் தரப்படும் எனத் தான் எதிர்பார்க்கிறார் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

## 4 பொலிஸாருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றிவளைப்பின் போது அவர்கள் ஒருவரை வேண்டுமென்றே சுட்டுக்கொன்றுள்ளனர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் 2005 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதி இடம்பெற்றது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களில், இருவர் தற்போது பொலிஸ் கடமையில் உள்ளனர்.

அவர்களில் ஒருவர் ஹங்கம

(10ஆம் பக்கம் பார்க்க)



### அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான விமானங்களில்

# இலங்கைக்கு வந்து சென்றவர்கள் யார்?

அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு விசேட விமானங்களில் நேற்றுமுன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இலங்கைக்கு வந்தவர்கள் நேற்றுப் பிற்பகல் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

விமானத்தில் வந்தவர்கள் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்திடம் ஊடகங்கள் வினவிய போதிலும், அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க தூதரகம் மறுத்துவிட்டது.

கிரேக்கத்தின் அமெரிக்க விமானப்படை முகாமொன்றிலிருந்து இரண்டு விசேட விமானங்களும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்க வந்துள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் ஒரு விமானம் மாலை 6.58 மணிக்கு இலங்கைக்கு வந்துள்ளதுடன், மற்றைய விமானம் 7.10 மணிக்கு விமான நிலையத்தை அடைந்துள்ளது.

இந்த விமானங்கள் யுத்த உபகரணங்களைக் கொண்டு போக்குவரத்துச் செய்யும் மிகப்பெரிய சரக்கு விமானங்களாகும்.

உயர்மட்ட இராஜதந்திரிகள் உள்ளிட்ட 29 பேர் இந்த இரண்டு விமானங்களிலும் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் இந்து பசுபிக் பாதுகாப்பு விடயத்துக்குப் பொறுப்பான தலைமை பிரதி உதவி பாதுகாப்பு செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் வருகை தந்துள்ளனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த இரண்டு விமானங்களும் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளன.

## மக்களின் உரிமைகளை ரணிலிடமிருந்து மீட்பதே பெரும் போராட்டம்: பீரிஸ்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியிடமிருந்து நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதே பெரும் போராட்டமாக உள்ளது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரஸ்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் காரியாலயத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசாங்கத்திற்கு மக்களாணை கிடையாது, பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் மக்களாணையுடன் அரசு ஒன்று தோற்றம் பெற வேண்டும்.

நாட்டு மக்கள் தமக்கான அரசை தெரிவு செய்வத்கு ஜனாதிபதி இடமளிக்க வேண்டும், தடையாக இருக்க கூடாது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகியன நடக்க இருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் படுதோல்வியடைவது உறுதி.

அரசியல் பின்னடைவை தவிர்த்துக் கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போட முறையற்ற வகையில் செயற்படுகிறார்.

தேர்தல் ஒன்றை நடத்தும்போது அரச நிறுவனங்களுக்கு ஒரே கட்டமாக நிதி ஒதுக்கப்படுவதில்லை. கட்டம் கட்டமாகவே நிதி ஒதுக்கப்படும். வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு தேவையான 400 மில்லியன் ரூபாவை வழங்குமாறு அரச அச்சகத் திணைக்களம் தேர்தல்கள் ஆணைக்குழவிற்கு அறிவுறுத்தியுள்ளது.

நிதி நெருக்கடியினால் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை அரச அச்சகத் திணைக்களம் இடை நிறுத்தியுள்ளது. அதற்குக் காரணம் பணம் இல்லை என்பது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ள பின்னணியில் 75 ஆவது சுதந்திர தினத்தை பல கோடி ரூபா செலவில் கொண்டாட முடிந்த அரசால் தேர்தலுக்கத்தானா பணம் ஒதுக்க முடியவில்லை?

சுதந்திர தினத்திற்கு அரச அச்சக திணைக்களம் செலவு செய்த நிதியை திறைச்சேரி முழுமையாக வழங்கியதா என்பதை திணைக்கள தலைவர் கங்கானி லியககே பகிரங்கப்படுத்தவேண்டும்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரச அதிகாரிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசலமைப்பின் 104 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பது 3 வருட கால சிறை தண்டனைக்குரிய குற்றம் என்பதை அரச அதிகாரிகள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அன்று மக்களாட்சிக் காவலர் இன்று பெரும் கொடுங்கோலர்

2015ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகப் பதவியேற்றபோதும் அதற்கு முன்னரும் மக்களாட்சிக் காவலராகப் போற்றப்பட்டார். அவர் பதவிக்கு வந்தால் மக்களாட்சி மாண்பு தழைக்கும் என்று நம்பப்பட்டது; நம்பிக்கை விதைக்கப்பட்டது.

மக்களாட்சியைப் பாதுகாத்து, அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து, நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பெருக்கி, சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்து, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் வகையிலான மக்களாட்சிக் காவலராக ரணில் தன்னை அப்போது காட்டிக்கொண்டார்.

ராஜபக்சக்கள் என்கிற கொடும் புதங்களுக்கு முன்னால் அமைதித் தேவதையாக ரணில் காட்டப்பட்டார். தலைமை அமைச்சராகப் பதவியில் இருந்த காலம் முழுவதும் அவரும் தனது வகிபாகத்தை அப்படியே பேணிக்கொண்டார். தன்னை ஒரு முற்போக்குச் சக்தியாக நிலைநிறுத்திக்கொள்ளும் அவரது வேடம் அந்த ஆட்சிக்காலத்தில் மிகச் சரியாகவே வேலை செய்தது.

ஆனால், இன்று அத்தனை வேடங்களும் கலைந்துவிட்டன. ஒரு காலத்தில் மக்களாட்சியின் பாதுகாவலரான வர்ணிக்கப்பட்டவர், இப்போது– மக்களாட்சியை வஞ்சிக்கும் கொடுங்கோலராக உருவெடுத்துள்ளார்.

மக்கள் போராட்டங்களை நசுக்குவது, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அழுத்தம் கொடுத்து அவற்றின் செயற்பாட்டில் தலையிடுவது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான இதய சுத்தியான முயற்சிகளை மேற்கொள்ளாமல் ஏமாற்றுவது, அரச தலைவர் பதவிக்கான அதிகாரங்களை ஒழிக்காமல் இருப்பது, இவையெல்லாவற்றுக்கும் மேலாக மக்களாட்சியின் அடிப்படையான தேர்தல் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டைகளையும் போடுவது என்று முற்றிலும் மக்களாட்சி விரோத அரச தலைவராக அவர் பரிணமித்துள்ளார்.

ஒரு காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு உட்பட ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மைக்காகப் போராடும் ஒருவராகத் தனனை அடையாளப் படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை, இன்று மக்களின் அடிப்படை உரிமைகளையே மதிக்காத ஒரு தலைவர் என்று விமர்சிக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிடமிருந்து மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவே பெரும் போராட்டம் நடத்தவேண்டியிருக்கிறது என்று கூறுகின்றார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். ஒரு காலத்தில் மனித உரிமைகளையே மதிக்காத ராஜபக்ஷக்களின் ஆட்சியில் அவர்களை ஆதரித்துத் துதிபாடி வாழ்ந்தவரான அவர் இப்போது ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து மக்களின் உரிமைகளைப் பேணப் போராட வேண்டியிருக்கிறது என்று தெரிவிக்கும் அளவிற்கு ரணில் செயற்பாடுகள் மக்களாட்சிப் பண்பில் இருந்து விலகிச் சென்றிருக்கின்றன.

பொருளாதார நெருக்கடிகளைக் காரணம் காட்டி ரணில் விக்கிரமசிங்க தனது இந்த மக்களாட்சி விரோதப் பண்புகளை நியாயப்படுத்த முடியாது.

## தேர்தலைச் சீர்குலைக்கும் சகலரும் நீதிமன்றத்துக்கு



### பரப்புரைக் கூட்டத்தில் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் சகலரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று யானை – காகம் – மொட்டு கூட்டிணைந்து சதியை மேற்கொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. இதற்கு மக்கள் எவரும் ஆதரவு வழங்கக்கூடாது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து அரசின் எதேச்சதிகாரத்துக்கு எதிராகப் போராட வேண்டும். தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் சகலரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் – என்றார்.

## ஜனாதிபதியின் உத்தரவாலேயே வாக்குச்சீட்டு அச்சிடல் நிறுத்தம்

### சாடுகின்றது ஜே.வி.பி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டதை தொடர்ந்தே வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை அரச அச்சகத் திணைக்களம் இடைநிறுத்தியது என்று குற்றஞ்சாட்டியுள்ளது ஜே.வி.பி.

தேர்தல் பணிகளில் ஈடுபட வேண்டாம் என ஜனாதிபதி அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்கிறார். ஜனநாயகத்திற்கு முரணான இந்த செயற்பாட்டை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

கட்சியின் அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டு இடம்பெற வேண்டிய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஒருவருட காலத்திற்கு பிற்போட்டார்.

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட ரணில் முயற்சிக்கிறார். நாடாளுமன்றத்தில் தம்மை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்த 134 உறுப்பினர்களையும் மகிழ்விக்கவே ஜனாதிபதி ரணில் தேர்தலை பிற்போட ஆரம்பத்தில் இருந்து முயற்சி செய்கிறார்.

நாடாளுமன்றத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட ஜனாதிபதி மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி தான் நினைத்ததைச் சாதிக்க முயற்சிக்கிறார்.

தபால் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இரண்டு தேர்தலை நடத்துவதற்கு தேவையான கடதாசி மற்றும் மை ஆகிய மூலபொருட்கள் அரச அச்சகத் திணைக்களத்திடம் உள்ள நிலையிலும் நிதி இல்லை ஆகவே வாக்குச்சீட்டு அச்சிட முடியாது என அச்சகத் திணைக்கள தலைவர் கூறுகின்றார்.

தபால் மூல வாக்களிப்பிற்கு 6 இலட்சத்திற்கும் அதிகமானோர் தகுதி பெற்றுள்ளார்கள். திருகோணமலை மாவட்டத்திற்கு தேவையான வாக்குச்சீட்டுகள் அச்சிடல் நிறைவுப் பெற்றுள்ளன.

சுமார் 3 இலட்சம் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ள நிலையில் வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் அரசியல் அழுத்தங்களினாலேயே இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்தியாவசிய தேவைகளுக்கு நிதி விடுவிப்பு தொடர்பில் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திறைச்சேரியின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதில் தேர்தல் நடவடிக்கை உள்ளடக்கப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த தேர்தலில் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் தேர்தலை அவர் அத்தியாவசிய தேவையாக கருதவில்லை.

வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி அரச அச்சகத் திணைக்கள தலைவருக்கு உத்தரவிட்டுள்ளார். இதனை தொடர்ந்தே வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என ஜனாதிபதி அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்கிறார். நாட்டின் அரசமைப்பை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு. ஆனால் அவர் அரசமைப்பிற்கு முரணாக செயற்படுகிறார். இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூற வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவின் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு இடமளிப்பதா, இல்லையா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். தான் தேர்தலில் வெற்றிப்பெறுவதாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நடத்துவார், அவ்வாறாயின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும் வரை எந்த தேர்தலையும் அவர் நடத்த போவதில்லை என்றார்.

## மஹிந்த தலைமையில் மொட்டுவின் பரப்புரை அநுராதபுரத்தில் ஆரம்பம்!

உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே இந்தத் தகவலை ஊடகங்களிடம் வெளியிட்டுள்ளார்.

கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பங்கேற்கும்



27 பிரதானக் கூட்டங்கள் மொட்டுக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டின் அரசமைப்பையும் மீறி அரச அச்சகம் செயல்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும்!

## தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவிப்பு

அரசமைப்பிற்கு அமைவாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது நிறைவேற்றுத் துறையின் பொறுப்பாகும்.

தேர்தலை நடத்துவதற்குரிய அனைத்து சட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு அனைத்து அரச நிறுவனங்களும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதை மீறுவதாகவே அரச அச்சகத்தின் செயற்பாடு அமைந்துள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமைப்பில் கூறப்பட்டுள்ள கடமைகளைச் செய்ய மறுத்தல் அல்லது தவறுதலின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதால், அரச அச்சகத்துக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தேர்தல் வன்முறைகளை கண் காணிப்பதற்கான நிலையம் தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப் பதற்கான நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக் கெடுப்பு கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

அச்சிடப்பட்ட தபால் மூல வாக்குச்சீட்டுக்களை உரிய வேளையில் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு அரச அச்சகம் மறுப்பு தெரிவித்தமையே இதற்குக் காரணம் என அறியக்கூடியதாகவுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு வாக்கு சீட்டுக்களை அச்சிடுவதற் கான மொத்த தொகையையும் செலுத்தும் வரை வாக்குசீட் டுக்களை அச்சிடும் சென்முறையை தொடர இயலாது என அரச அச்சகத்தால் கடந்த திங்களன்று தேர்தல் ஆணைக் குழுவிற்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடன் அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அரச நிறுவன தலைவர்களுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 9 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதில் தபால் மூல வாக்கெடுப்பிற்கு ஏற்பட்டுள்ள இந்த இடையூறு தாக்கம் செலுத்தும் என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் நம்புகிறது.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் வாக்காளர்கள் மத்தியில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துவதுடன் இலங்கையின் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து பிரஜைகளினதும் வாக்களிக்கும் உரிமையை நேரடியாக மீறுவதாக இது அமைகின்றது.

அதேவேளை, அரசமைப்பிற்கு அமைவாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது நிறைவேற்றுத்துறையின் பொறுப்பாகும் என முன்னிலைப்படுத்துகின்றோம். தேர்தலை நடத்துவதற்குரிய அனைத்து சட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு, அனைத்து அரச நிறுவனங்களும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசமைப்பின் 104பீ(2)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை மீறுவதாகவே அரச அச்சகத்தின் இந்த செயற்பாடு அமைந்துள்ளது.

இந்தக் கடமைகளைச் செய்ய மறுத்தல் அல்லது தவறுதல் அரசமைப்பின் 104ஏஏ பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். குறித்த பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அரச அச்சகம் மற்றும் செயன்முறைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வேறு எந்த பொது அல்லது அரச நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவை வலியுறுத்துகின்றோம். – என்றுள்ளது.




## சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக எம்.மாஹிர்!



சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் தெரிவாகியுள்ளார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் இராஜினாமா செய்தமையால் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் சபா மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதன் பிரகாரம் பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் வகையில் இடம்பெற்ற அமர்வில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிரின் பெயர் மாத்திரமே தவிசாளர் பதவிக்காக முன்மொழியப்பட்டன.

இதனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணனால் ஏகமனதாக சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக ஐ.எல். எம்.மாஹிரின் பெயரை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆறு உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட பத்துஉறுப்பினர்கள்சபைக்கு சமுகமளித்தனர்.

இதில் அம்பாரை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல். ஏ.கமல் நெத்மினி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் புலனாய்வு உத்தியோகத்தர் விசேடதரம் என்.ஐங்கரன், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட், உதவித் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



- சத்யா -

# இளம் பெண் குழந்தைகளின் மன அழுத்தம் ஆபத்தானதா?

பெண்களைக் கொண்டாடுவது நம் சமூகத்தின் மரபு. ஆனால் இளம் பெண்களின் உணர்வுகளை சமூகத்திற்கு கையாளத் தெரிகிறதா? இந்தப் பெரும் கேள்வி நிரந்தரமாகவே நிலவுகிறது. அதற்கு தீர்வுக் காணவோ பெண் பிள்ளைகளின் உணர்வுகளை மதித்து நடக்கவோ பெரும்பாலும் யாரும் முயல்வதில்லை.

பொதுவாகப் பெண் குழந்தைகள் 12 வயது தொடங்குகையில் வயதுக்கு வருகிறார்கள் ( Puberty) என சொல்லப்படும் பருவ மாற்றத்தை எட்டத் தொடங்குகிறார்கள். அதாவது கருப்பை மாற்றம் மற்றும் வளர்ச்சி தொடங்குகிறது. அதன் விளைவாக பெண் குழந்தை உடலில் ஹார்மோன்ஸ் மாறுபட்டு, மாதந்திர உதிரப் போக்கு தொடங்குவதை இந்தச் சமூகம் ஒரு விழாவாக கொண்டாடித் தீர்க்கிறது. அதன்பின் அப்பெண் குழந்தைகள் பற்றிய உணர்வு ரீதியான விடயங்களை நினைக்கத் தவறுகிறது இந்த சமூகம்.

உண்மையில் பருவ மாறுபாட்டால் வளர் பெண் குழந்தைகள் உடலியல் மாற்றத்தை அடைவதைப் போலவே மனதளவிலும் பெரும் அழுத்தத்தைச் சந்திக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதை வெளிக்காட்டத் தெரிவதில்லை பெற்றோர்களும் அதனைத் தெரிந்துக்கொள்ள முயற்சிப்பதில்லை என்பதே பெரும் வேதனை

### மன அழுத்தத்தின் விளைவுகள்

உடல் மாற்றத்திற்கும் மனதின் செயல்களுக்கும் இருக்கும் தொடர்பைப் பலரும் புரிந்துக்கொள்வதே இல்லை அதற்கான விழிப்புணர்வைப் பிள்ளைகளிடம் பெற்றோர்களும் ஆசிரியர்களும்கூட ஏற்படுத்துவதில்லை. பிள்ளைகள் படிக்க வேண்டும் நல்ல புள்ளிகள் எடுக்கவேண்டும் ஒழுக்கமாக இருக்கவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கருதிச் செயற்படுகிறார்கள். அவர்களும் உணர்வுள்ளதென மதிப்பதற்கும் அணுகுவதற்கும் யாருக்கும் மனம் வருவதில்லை.

பெண் குழந்தைகள் ஹார்மோன் மாற்றத்தால் பருவ வயதை எட்டுகையில் பல்வேறு மனச் சிதைவுகளுக்கு ஆளாகிறார்கள். அதன் விளைவாக தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொள்கிறார்கள் அல்லது வயதுக்கு மீறிய சிந்தனை மற்றும் தவறான நட்பைத் தேர்ந்தெடுக்கிறார்கள்

மேலும் இந்த ஹார்மோன் மாற்றம் எதிர்பாலினத்தின் மீதான ஆவலையும் துண்டும் பெரும் வேலையை செய்கிறது. பொதுவாக 14 வயது தொடங்குகையில் ஆண் பெண் பிள்ளைகளுக்குள் இனக் கவர்ச்சி ஏற்படும். இதனால் உந்தப்பட்டு தொட்டுப்பேசிக் பழகிக்கொள்வார்கள் இது இயல்பானது. மாறாக சில குழந்தைகள் இத்தகைய இனக்கவர்ச்சிக்கு அதீத அடிமையாகி அதையே காதல் என நினைத்து தவறான பாதைக்கும் செல்லத் தொடங்குகிறார்கள்.

படிப்பின் பாரம் ஒருபுறம், மனச்சிதைவு ஒருபுறம், உடலின் பருவமாற்றம் மறுபுறம் எனப் பெரும் போராட்டத்தைத் தனக்குள் எதிர்கொண்டு



அவஸ்தைப்படுகையில் பெரும் கோபத்தை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். சில பிள்ளைகள் தனிமையை தேர்ந்தெடுத்து அமைதியாகி நிற்கிறார்கள். இதன் பூதகர பின் விளைவாக வன்மம், பழிவாங்கல் அல்லது தற்கொலை எண்ணம் போன்றவை ஏற்படுகின்றன.

### தீர்வு தான் என்ன?

குழந்தைகள் வளர்ந்து விட்டார்கள் இனி அவர்களே பார்த்துக்கொள்வார்கள் என அவர்களை தனியே விடுதலே இப்பிரச்சனைகளுக்கு முதற் காரணம். அவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான உறவின் பாலம் இந்த வயதில் பலப்படவேண்டும்



அவர்களுக்கான நேரத்தை ஒதுக்குங்கள்

உறவுகளோடு அடிக்கடி பயணங்கள் அல்லது சந்திப்பை ஏற்படுத்துங்கள்

அவர்கள் உறக்கத்தையும் உணவு முறையையும் கருத்தில் கொள்ளுங்கள்

ஆண் பெண் நட்பை ஆரோக்கியமாகக் கொண்டு செல்ல வழிகாட்டுங்கள்.

காதல் என்பதை சமூகக்கேடாக பெரும் குற்றமாக கருதாமல் அதன் உணர்வுகள் குறித்து கோபமின்றி நட்பின் அணுகுமுறையோடு வயது வந்த பிள்ளைகளிடம் பேசுதல் நலம்

படிப்பை திணித்தல் முறையில் அல்லாமல் அவர்கள் விரும்பும் முறையில் அமைத்தலே அவர்களின் எதிர்காலத்திற்கும் பயன் தரும்

விளையாட்டுத் தனமாக நகைச்சுவையாகப் பிள்ளைகளின் நண்பர்களையும் ஒருசேர ஆதரித்து அவர்களோடு பேசி அளவளாவித் தானும் ஒரு நட்பாக மாறி பிள்ளைகளிடம் பெற்றோர்கள் இணங்கி செல்லும் போது அப்பெண் பிள்ளைகள் மிகுந்த ஆரோக்கியமான சூழலை அடைவார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்காது.

பெண் பிள்ளைகளை உடல் அளவிலும் மனதளவிலும் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை கவனத்தில் கொள்வோம். வரும் தலைமுறையை மனஅழுத்தமின்றி வாழவழிச்செய்வோம்.

கட்டுரையாளர் இளங்குழந்தைகள் ஆசிரியர்
(Early childhood educator), கனடா



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# சுயேச்சைக் குழுக்களின் நாடகத்தில் மக்கள் சக்திக்கு தொடர்பில்லையாம்!

## ஏமாறாதீர்கள் என்கிறார் சஜித்



நாட்டு மக்களை ஏமாற்றி சுயேச்சைக் குழுக்கள் எனக் கூறிக்கொண்டு எத்தனை பேர் தேர்தலில் போட்டியிட்டாலும் அதில் ஒன்றேனும் சஜித் பிரேமதாஸவின் குழுக்கள் அல்ல எனவும், தன்னிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் திறமையான அணி மட்டுமே உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கெக்கிராவ பிரதேசத்தில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்டத்தின் மூலம் நாட்டை அழித்த நிதியமைச்சர், பிரதமர் , ஜனாதிபதி ஆகியோர் விரட்டியடிக்கப்பட்ட போதிலும் இறுதியில் இவர்களின் கைப்பாவையே ஜனாதிபதியாகி மக்களை மேலும் அநாதரவாக்கினார்.

அத்துடன்,அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் மக்கள் ஜனநாயகத்தைக் கோரிய போதும், அந்தப் போராட்டத்தின் போர்வையில் சிலர் பயங்கரவாதத்தை முன்னெடுத்தனர் எனவும், ஆனால் போராட்டத்தின் பெரும்பகுதி அமைதியான உன்னத நோக்கங்களைக் கொண்ட இளைஞர்களைக் கொண்டிருந்தது எனவும், புதிய ஜனநாயக ஆட்சியை உருவாக்க நினைத்தாலும், இறுதியில் ராஜபக்ஷவின் பினாமி ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகி நாட்டு மக்களை இன்னும் மோசமான வாழ்க்கைக்கு இழுத்துச் சென்றுள்ளார்.

நாட்டு மக்களை இவ்வாறு அவல வாழ்க்கைக்கு இட்டுச் சென்ற யானை, காகம் மொட்டுக் கூட்டணி தற்போது சுயேச்சைக் குழு ஊடாக மக்களை மீளவும் ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், இந்த சுயேச்சைக் குழுக்களில் ஐக்கிய மக்கள் சக்தியினர் உள்ளடங்கவில்லை என்பதால், இதை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

# 28.5 லட்சம் குடும்பங்களுக்குக்கு மார்ச், ஏப்ரலில் இலவச அரிசி

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களில் இலவச அரிசி வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் 28 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் தேவையுடைய எவரையும் தவறவிட வேண்டாமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்தக்கூடிய வகையில் 20 பில்லியன் ரூபாவிற்கேனும் போதுமானளவு நெல்லைக் கொள்வனவு செய்யுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநியோகப் பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி, வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பொறிமுறை ஒன்றினூடாக அதனைக் குறைந்த வருமானம் பெறுவோருக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி இதன் போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தத் திட்டத்திற்காக நெல்லைக் கொள்வனவு செய்யும்பணி மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பல அமைச்சுக்களுடன் இணைந்து இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கென முழு நேரமும் செயற்படுவதற்குப் படை அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி தேவையுடையவர்களுக்கு அரிசியை பகிர்ந்தளிக்கும் முறையான பொறிமுறையொன்றை இவர்கள் தயாரிப்பார்கள்.

அரசால் இலவசமாக வழங்கப்படவுள்ள இந்த அரிசியை 'நிவாரண அரிசி' என்ற பெயரில் விற்காமல் இருப்பது உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளைப் பெறுதல் மற்றும் மாவட்டச் செயலர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றன.

"கிராம மட்டத்தில் செயற்பட அரச அதிகாரிகள் முன்வராவிட்டால் ஒப்பந்த அடிப்படையில் குழுவொன்றை நியமித்தாயினும் தரவுகள் சேகரிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தவேண்டும்.

ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பை இதற்காக பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பிட்ட கால வரையறைக்குள் இந்த வேலைதிட்டத்தை முடிவு செய்வதற்கு திட்டமிட வேண்டும்" – என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# சீனா ஆதரவு

வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கடன்வழங்குநர்கள் கூட்டத்திற்கு முன்னதாக இலங்கைக்கு சீனா ஆதரவை தெரிவித்துள்ளது.

இருப்பினும், இலங்கையை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ள பல மில்லியன் டொலர் கடன் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பது குறித்து சீனா எதனையும் தெரிவிக்கவில்லை.

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சாதகமான பங்களிப்பை வழங்குவதற்காக சீனா உரிய நாடுகள் மற்றும் நிதியமைப்புகளுடன் இணைந்து செயற்படும் என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் தெரிவித்தார்.

சர்வதேச நாணயநிதியத்தின் கடனிற்கு இலங்கை விண்ணப்பித்துள்ளமைக்கு சீனா தனது ஆதரவை வெளியிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# மக்களின் உணர்வுகள் மதிக்கப்படும்: வெடுக்குநாறி மலையில் டக்ளஸ் உறுதி!





வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் தொடர்ச்சியாக பூஜை வழிபாடுகளை மேற்கொள்வது உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேற்படி பகுதியில் உள்ள தொல்லியல் சின்னங்கள் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அனைவரின் செயற்பாடுகளும் அமைவது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமாக இந்துக்களால் வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்வதற்கு, அரசாங்க திணைக்களங்கள் சிலவற்றின் கடமைசார் செயற்பாடுகள் இடையூறாக அமைந்துள்ள நிலையில், குறித்த பகுதிக்கு புதன்கிழமை கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்ட போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த விடயம் தொடர்பாக பிரதேச மக்களின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் கேட்டறிந்த அமைச்சர், மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் அரசாங்க திணைக்களங்களின் செயற்பாடுகள் அமையுமாயின், அவை தொடர்பாகக் கரிசனை செலுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட உள்ளதுடன், துறைசார் அமைச்சர்களுடனும் பேசி பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக, தமிழ் மக்களின் பிச்சினைகள் மற்றும் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சுட்டிக்காட்டப்பட்டது. அதன்போது, சம்பந்தப்பட்ட பகுதிக்கு நேரடியாக சென்று நிலைமைகளை ஆராய்வதுடன், சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சர்களுடன் இணைந்து சுமுகமான தீர்வைக் காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெடுக்கநாறி மலைக்கான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பயணத்தின் போது, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனும் இணைந்திருந்தார்.

# மொட்டுவிலிருந்து வெளியேறியோருக்கு தேர்தலில் தக்க பாடம் புகட்டுவர் மக்கள்!


கோகிலா ஹர்சனி எம்.பி. நம்பிக்கை

தேர்தலை எதிர்கொள்வதற்கு மொட்டுக் கட்சி ஒருபோதும் பின்வாங்காது. மொட்டுவிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்குத் தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

– இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா ஹர்சனி குணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குக் கிடைத்த வாக்குகளை வைத்துக்கொண்டு வெற்றி பெற்ற தரப்பினர் இன்று எதிர்க்கட்சிகளில் இருந்துகொண்டு செயற்படுவதால் அது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை எந்தவிதத்திலும் பாதிக்காது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெண்கள் முன்னணி என்ற முறையில் எதிர்வரும் வாரங்களில் நாடளாவிய ரீதியில் சம்மேளனத்தை நடத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

கட்சி என்ற முறையில் எமது அரசியல் நடவடிக்கைகளை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டு செல்கின்றோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். எந்தத் தேர்தலையும் வெற்றிகொள்வதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன எப்போதும் தயாராகவே இருக்கின்றது.

யார் எதனைக் கூறினாலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் அஞ்சாது.

கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் பாரிய தோல்வியைச் சந்திப்போம் என்று அனைவரும் கூறினர். எனினும், அந்தத் தேர்தலிலும் நாம் பாரிய வெற்றியைப் பெற்றோம். அதேபோன்று இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் பாரிய வெற்றியைப் பெறுவோம்.

நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றை எதிர்கொள்வதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். அதற்காகக் கிராமங்களில் உள்ள மக்கள் தயாராகவே இருக்கின்றனர்.

இந்த நாட்டுக்குச் சேவையாற்றியவர்கள் யார், சேவையாற்றாதவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

ஹெலிஹொப்டர் சின்னத்தில் இருப்பவர்களும் ஏனைய எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் எமது கட்சியிலேயே கடந்தமுறை போட்டியிட்டார்கள். இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் அவர்களுக்கு நன்கு பாடம் புகட்டுவார்கள் – என்றார்.

# அரசு அழுத்தங்களுக்கு உள்ளாகி எவரையும் பதவி நீக்கம் செய்யாது

## ஆர்ப்பாட்டக்காரர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



குறிப்பிட்ட சில அதிகாரிகளை நீக்கக் கோரி வேலைநிறுத்தம் நடப்பதற்காக நாம் யாரையும் தன்னிச்சையாக நீக்க மாட்டோம். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கென சில விதிமுறைகள் இருப்பதனால் அரசு அவற்றை முறைப்படி பின்பற்றியே செயற்படும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்புட்ரேஸ்சிட்டியிலுள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தில் நிர்வாகம் மற்றும் பொதுக் கொள்கைக்கான மையத்தை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இது தொடர்பில் குறிப்பிட்ட ஜனாதிபதி, இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பாரிய பொறுப்பு பல்கலைக் கழகங்களுக்கே அதிகளவில் உள்ளன. இரண்டு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்திலேயே இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தில் நிர்வாகம் மற்றும் பொதுக் கொள்கைக்கான மையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதில் ஒன்று உப வேந்தரை நீக்கக் கோரி ருஹுணு பல்கலைக்கழகத்திலும் மற்றையது எமது கூட்டுத்தாபனம் ஒன்றின் பொது முகாமையாளரை நீக்கக் கோரியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, பொது முகாமையாளரை பதவி நீக்குவதென்பது அரசுடன் சம்பந்தப்பட்டதொரு விடயம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்தமைக்காக நாம் அவரைப் பதவியிலிருந்து நீக்க மாட்டோம்.

அவருக்கு எதிராக ஏதேனும் தீவிரமான குறைபாடுகள் இருப்பதாக அவர்கள் நினைத்தால் அதற்காகப் பின்பற்ற வேண்டிய நடைமுறை ஒன்று உள்ளது. உப வேந்தர்கள் தொடர்பிலும் பின்பற்ற வேண்டிய நடைமுறையொன்று உள்ளது.

மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காகவும் அது கூட்டுதாபனம் அல்லது பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்பட்டது என்பதற்காகவும் இந்த அரசாங்கம் மாறாது.

நாம் விதிமுறைகளைப் பின்பற்றி அதன்படியே செயற்படுவோம். ஏனெனில், நான் தற்போது இவற்றை கருத்திற்கொண்டால், அடுத்த தடவை அவர்களுக்கு பீடாதிபதிகள் மற்றும் அதனை தொடர்ந்து திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோரையும் பதவி நீக்கும் தேவை ஏற்படும். பின்னர் தங்களைக் கேட்காமல் எம்மால் பேராசிரியர் ஒருவரை நியமிக்க முடியாது என்றும் அவர்கள் எம்மிடம் கூற முடியும். என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தப் பல்கலைக்கழகங்களில் என்ன நடக்கப் போகிறது என்பது குறித்து நாம் தீவிரமாக பார்க்க வேண்டும் என நான் நினைக்கிறேன். என்ன நடக்கிறது என்பதை அறியும் உரிமை நாட்டுக்கு உண்டு. எமது மக்களுக்கு கல்வி புகட்டுவதற்காக நாம் பணத்தைச் செலுத்துகிறோம். எனவே பல்கலைக்கழகங்கள் முறையாக செயற்பட வேண்டுமென நாம் விரும்புகின்றோம். இந்த ஆர்ப்பாட்டம் ருஹுணு பல்கலைக் கழகத்தில் இடம்பெறுவது எனக்குக் கவலையளிக்கின்றது – என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# நிதி கிடைக்காமல் வாக்குச்சீட்டுகளை அச்சிட முடியாது

## அச்சகத் திணைக்களத் தலைவர் திட்டவட்டம்

அச்சக பணிகளுக்கு நிதி வழங்காமல் வாக்குச்சீட்டுக்களை அச்சிட முடியாது. நிதியை உடனடியாக வழங்கினாலும்கூட வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை நிறைவு செய்ய மூன்று அல்லது நான்கு நாட்கள் தேவைப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் அரச அச்சகத் திணைக்களத் தலைவர் கங்கனி லியனகே. அவர் இது தொடர்பில் செய்தியாளரிகளிடம் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டிய தேவை எனக்கு இல்லை. அரசியல் களத்தில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் உண்மையற்றவை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்குச்சீட்டு அச்சிடலுக்கு 400 மில்லியன் ரூபா செலவாகும் நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு 40 மில்லியன் ரூபாவை மாத்திரம் வழங்கியுள்ளது.

மிகுதி 360 மில்லியன் ரூபாவை வழங்காவிட்டால் வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை தொடர முடியாது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கடந்த திங்கட்கிழமை உத்தியோகப்பூர்வமாக அறிவித்தோம்.

நிதி வழங்காத பட்சத்தில் அச்சக பணிகளை தொடர்ந்தால் பின்னர் வரும் பிரச்சினைகளுக்கு யார் பொறுப்பு கூறுவது. ஆகவே நிதி வழங்கல் தொடர்பில் எவரும் உத்தரவாதம் வழங்காத பட்சத்தில் எம்மால் தன்னிச்சையாக செயற்பட முடியாது – என்றார்.

# ரணில் பதவியில் இருக்கும் வரை தேர்தல் எதுவும் நடைபெறாது

## இப்படிக் கூறுகின்றார் சுமதிபால

பணம் இல்லை எனத் தெரிவித்து உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் வரைக்கும் எந்தத் தேர்தலும் இடம்பெறாது. அதனால் மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்கு யாருக்கும் இடமளிக்கக்கூடாது.

– இவ்வாறு சுதந்திர மக்கள் கூட்டணியின் செயலாளர் திலங்க சுமதிபால எம்.பி. தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறுமா? இல்லையா? என்ற சந்தேகம் எழுந்திருப்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. என்றாலும் எதுவும் கைகூடவில்லை. தற்போது தேர்தல் செலவுக்குப் பணம் வழங்குவதற்கு பணம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காரணத்தை அடிப்படையாக்கொண்டு தேர்தல் பிற்போடப்பட்டால் ஜனாதிபதித் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ இடம்பெறாது.

தேர்தல் நடத்துவதற்குப் பணம் இல்லை எனத் தேர்தல் நடத்துவதற்குப் பாறெப்பான நிறுவனம் தெரிவிப்பதாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் வரைக்கும் எந்தத் தேர்தலும் இடம்பெறாது.

அதனால் மக்களின் ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையை பறிப்பதற்கு யாருக்கும் இடமளிக்க முடியாது.

அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குத் தேவையான அனைத்து கடதாசிகளும் தற்போது போதுமாளவு இருப்பதாகவும், தேர்தலுக்குத் தேவையான பத்திரங்கள் இதுவரைக்கும் சில மாவட்டங்களுக்கு அச்சிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.



குறிப்பாக 7 மாவட்டங்களுக்குத் தேவையான தபால் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளன என்று அரசாங்க அச்சக பிரதானி தெரிவித்திருக்கின்றார்.

எனவே, பணம் இல்லை என்ற காரணத்துக்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசுக்கு இடமளிக்கக்கூடாது. தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பாக சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

# சிறுத்தையை கொன்று இறைச்சியை விற்பனை செய்த நான்கு பேர் கைது!

பொகவந்தலாவ பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களில் சுற்றித்திரிந்த சிறுத்தையை கொன்று இறைச்சியாக விற்பனை செய்தார்கள் என்கிற குற்றச்சாட்டில் நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுத்தை இறைச்சியை விற்பனை செய்து கொண்டிருந்த போது நான்கு சந்தேக நபர்களைக் கைதுசெய்ததுடன், கொல்லப்பட்ட சிறுத்தையின் உடலின் ஒரு பகுதியையும் பொகவந்தலாவ பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பொகவந்தலாவ கொட்டியாகலை தோட்டத்தின் மேல் பகுதியில் வசிப்பவர்கள் என்பதுடன், அதனை அண்டிய சமனல இயற்கை சரணாலயத்தில் சுற்றித்திரியும் சிறுத்தைகள் இரை தேடி தேயிலை தோட்டத்துக்கு வரும்போது கம்பிக்கூடு அமைத்து பிடித்து கொன்றுள்ளனர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சிறுத்தையின் உடல் பாகங்கள் நல்லதண்ணி வனஜீவராசிகள் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## 4 பொலிஸாருக்கு .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் குற்றப் பிரிவிலும், மற்றையவர் அரச புலனாய்வு சேவையிலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் தற்போது பொலிஸ் கடமையில் இல்லை எனவும், இன்னுமொருவர் ஓய்வுபெற்றுள்ளார் எனவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய மக்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரும் எதிரணி பிரதம கொறடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை அரசமைப்பின் ஓர் அங்கம். அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்குகின்றது. அதேபோல் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் சர்ச்சை நிலை காணப்படுகின்றது. அனைவரும் பேசி இவ்விரு அதிகாரங்கள் தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால்கூட பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் இணக்கப்பாடு இல்லையேல் அவற்றை அமுல்படுத்த முடியாது. 13 இல் உள்ள ஏனைய விடயங்கள் வழங்கப்படும். அத்துடன், சமஷ்டி தீர்வை நாம் ஆதரிக்கவே மாட்டோம் – என்றார்.

## யாழ். பொலிஸார் 2 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்திய காரணத்தாலேயே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 75ஆவது சுதந்திரதினத்தையொட்டி பெப்ரவரி 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னணி யாழ். நகரப் பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஏற்கனவே ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை உத்தரவு பெற்றிருந்த பொலிஸார், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னணியினர் 18 பேரைக் கைது செய்து பொலிஸ் நிலைய காவல் அறையில் (லொக்கப்) அடைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னணியின் பேச்சாளர் சுகாஸ் ஆகியோர் உள்ளிட்ட கைது செய்யப்பட்டவர்கள் காவல் அறையில் இருந்தபோது செல்பேசிகளைப் பயன்படுத்தும் ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி இருந்தன. தடுப்புக் காவலில் இவ்வாறு கைதிகள் செல்பேசி பயன்படுத்த எவ்வாறு அனுமதிக்கப்பட்டனர் என்பது முகப்புத்தகத்தில் பெரும் விவாதமானது.

இதனை அடுத்து காவல் அறையில் கைதிகள் செல்பேசிகளைப் பயன்படுத்த அனுமதித்தனர் என்கிற குற்றச்சாட்டில் இரு பொலிஸார் தண்டனை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## கண்டியில் குடியரசு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

75 ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்துடன் இணைந்ததாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தலதா மாளிகை இணைப்பாளர் ஜெயம்பதி வெத்தகல தெரிவித்தார், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மாலை 6.30 மணிக்கு கண்டி மங்களகூடத்தில் இருந்து ஆரம்பிக்கும் பெரஹரா, தலதா வீதி, யட்டிநுவர வீதி, கந்த வீதி வழியாக ரஜ வீதியில் பிரவேசித்து மீண்டும் தலதாமாளிகையை வந்தடையும் என ஜெயம்பதி வெத்தகல தெரிவித்தார்.

வருடாந்த எசல பெரஹெர போன்று யானைகள் மற்றும் நடனக் குழுக்களால் இந்த குடியரசு பெரஹராவை வண்ணமயமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த பெரஹராவிற்கு புனிததந்தம் கொண்டு வரப்பட மாட்டாது என்பதோடு, மாறாக குடியரசு சின்னம் மாத்திரம் வீதி உலா வரும்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இம்முறை பெரஹரா ஏற்பாடு செய்யப்படுவதுடன், பெரஹராவை காணவரும் மக்களுக்காக கண்டி பெரஹரா வீதியில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் மிகவும் விசேடமான மற்றும் முக்கியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ தலதா மாளிகையினால் இவ்வாறான விசேட பெரஹராகள் ஏற்பாடு செய்யப்படும்.

இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது பெரஹரா 1875 இல் நடைபெற்றது, மேலும் இது விக்டோரியா மகாராணியின் மகன் வேல்ஸ் பிரபு இலங்கைக்கு வருகை தந்ததை முன்னிட்டு நடத்தப்பட்டது.

1954 ஆம் ஆண்டு இலங்கையின் அரச தலைவரான இரண்டாம் எலிசபெத் மகாராணி இலங்கைக்கு வருகை தந்த பின்னர் இரண்டாவது பெரஹரா நடத்தப்பட்டது. அதனை எண்கோண மண்டபத்திலிருந்து (பத்திரிப்புவ) எலிசபெத் மகாராணி கண்டுகளித்தார் என்று வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது பெரஹரா 1981 இல் நடைபெற்றதோடு அதைக் காண இரண்டாவது எலிசபெத் மகாராணி வருகை தந்திருந்தார். மகா மண்டபத்தில் (மஹாமலுவ) அமைக்கப்பட்ட விசேட மேடையில் இருந்து அவர் பெரஹராவை பார்வையிட்டார்.

1987 ஆம் ஆண்டு நான்காவது குடியரசு பெரஹரா இலங்கையின் அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசவினால் நடத்தப்பட்டது. இவ்வருடம் ஐந்தாவது குடியரவு பெரஹரா நடைபெறுகிறது.

## சிறுபிள்ளைத்தனமாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுவயதில் நாம் கிரிக்கெட் விளையாடும்போது, தோல்வி ஏற்படும் எனத் தெரிந்துவிட்டால் சிலர் பந்தை ஒளித்துவிடுவார்கள். அது சிறுவர் பராயம்.

இதுபோல்தான் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தோல்வி ஏற்படும் என்பதால் தேர்தலைப் பிற்போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முற்படுகின்றது.

வாக்குச்சீட்டு அச்சிட காசு இல்லை உட்பட சிறுபிள்ளைத்தனமாகக் காரணங்கள் கூறப்படுகின்றன. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் 21 தடவைகள் முயற்சித்துள்ளது. அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் தேர்தல் வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை இடைநிறுத்தி தேர்தலை பிற்போடும் புதிய முயற்சியை அரசாங்கம் தற்போது வகுத்துள்ளது.

வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் தபால் மூல வாக்களிப்புக்கு தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மக்களாணைக்கு முரணாக செயற்படும் அரசாங்கத்தின் வன்மையாக கண்டிக்கத்தக்கது. தேர்தலை நடத்த அரசாங்கத்திடம் நிதி இல்லை என்று குறிப்பிடுவது முற்றிலும் பொய், உண்மை என்னவென்றால் அரசாங்கத்திற்கு வாக்கு இல்லை அதனால் அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன ஜனநாயகத்திற்கு எதிராக செயற்பட்டதால் நாட்டில் இரத்த வெள்ளம் ஓடியது,அரசாங்கத்தின் தேவைக்காகவே அக்காலப்பகுதியில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகள் நாட்டில் ஏற்படுத்திய அழிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு அழைப்பு விடுவதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும்.நாட்டுமக்களின் அடிப்படை தேர்தல் உரிமைகளை பாதுகாக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவது அரசமைப்பிற்கு முரண் என்பதை ஆட்சியாளர்கள் அறியாமல் இருப்பது வேடிக்கையாக உள்ளது – என்றார்.

## சிவாஜி திடீரென ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் பழ.நெடுமாறன் மற்றும் காசிஆனந்தன் இணைந்து அறிவித்ததைத் தொடர்ந்து அவர் திடீரென தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டுச்சென்றுள்ளார்.

பிரபாகரனின் நெருங்கிய உறவினர் என கருதப்படும் எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு சென்னை சென்றிருப்பது பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தப் பயணத்தில் பழ.நெடுமாறனையும் சிவாஜி சந்திக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09 கண்டி வீதியில் ஆதன இலக்கம் 404 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது கணபதிப்பிள்ளை கைம்பெண் சின்னப்பிள்ளை என்னும் பெயரில் எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தை கந்தையா சீவரத்தினமும் பெண் சிவமணியும் பிரசித்த நொத்தாரிசு விஜிதா பத்மசிறி மீஹாவத்த முகதாவில் 23.05.2021 ஆம் திகதியிட்டு 593 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதியுறுதி மூலம் சின்னையா சின்னராசா பெண் பத்மாவதிக்கு அறுதியாக விற்றிருந்தார்.

பின்னர் குறித்த ஆதனத்தை சின்னையா சின்னராசா கைம் பெண் பத்மாவதி என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 2013.08.23 ம் திகதியிட்டு 625 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனது மகன் சின்னராசா சுரேஸ்குமாரும் பெண் அருள்வாணிக்கும் நன்கொடை நன்கொடை வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை தற்காலம் பிரான்ஸ் சின்னராசா சுரேஸ்குமாரும் பெண் அருள்வாணியும் தமது அற்றோனி தத்துவகாரர் சின்னராசா கைம்பெண் பத்மாவதி மூலமாக ஜெகநாதன் சுஜீவன் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு திருமதி சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 2019.02.19ஆம் திகதியிட்டு 3183 இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் அறுதி விற்றிருந்தார்.

பின்னர் குறித்த ஆதனத்தை ஜெகநாதன் சுஜீவன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 19.02.2019 ம் திகதியிட்டு 3184 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மீளவும் அதே நாளில் சின்னராசா கைம்பெண் பத்மாவதிக்கு அறுதியாக விற்றிருந்தார்.

மீண்டும் அதே நாளில் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு திருமதி சுதா கஜேந்திரகுமார் முகதாவில் நிறைவேறிய 3185 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சின்னராசா சுரேஸ்குமாருக்கு தனது சீவிய உரித்துக்கமைவாக நன்கொடையாக வழங்கியுள்ளார்.

சின்னராசா சுரேஸ்குமார் என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி சுதா கஜேந்திரகுமார் முகதாவில் நிறைவேறிய 3718 ஆம் இலக்க 2019.11.27 ஆம் திகதி நிறைவேறிய அறுதி உறுதி மூலம் நடராசா தவராசாவும் பெண் தேவராணி என்பவருக்கு அறுதியாக விற்றிருந்தார்.

ஆதன இடாப்பு:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று அரியாலை இறை 'உள்ளூராட்சி அதிகார சபை யாழ்ப்பாணம் மாநகரசபை பிரதேச செயலர் பிரிவு நல்லூர் கிராமசேவகர் பிரிவு 1/95 பிரப்பங்குள வளவும் பிரப்பங்குளத்து வளவும் பிரப்பங்குள புலமும் நில பர 01 ஆனால் இது 2019.09.25 ஆம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.பி.புஸ்பராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 6530 ஆம் இலக்கப்படத்தில் சுட்டிய 1 ஆம் இலக்க துண்டின் பிரகாரம் நில பர 00 பூச்சியம் குளி 16.76 பதினாறு தசம் ஏழு ஆறும் வீடும் கடையும் பயிர்வகைகளும் கிழக்கெல்லை ஆதனத்தினுள்ளிருக்கும் கிழக்கு கிணற்றில் பங்கும் எல்லையாதனத்தின் தெற்கெல்லையருகாக வைக்கப்பட்ட கையொழுங்கையினூடாக வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் எல்லை

கிழக்கு:- மயிலு பெண் அன்னம்மாவினுரிமைக்காரரினாதனமும் வழி வாய்க்கால் முகப்பும்
வடக்கு:- றோட்டு
மேற்கு:- வீரசிங்கம் பெண் காந்திமதியினாதனம்
தெற்கு:- சின்னத்தம்பி கைம்பெண் செல்லம்மாவினாதனம் இதடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளனைத்தும்

தற்போது இவ்வாதனத்தை **நடராசா தவராசாவும் பெண் தேவராணியும்** தமது பெயரிற்கு எமது விண்ணப்பித்துள்ளார்கள். எனவே இவ்வாதனத்திற்கு பதிவேட்டில் பெயர்மாற்றம் முழுமையாகவோ/பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த / மூலம் எழுத்து உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மாதத்திற்குள் ஒரு அறியத்தருமாறும்இ உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது நடராசா தவராசாவும் பெண் தேவராணியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை.**
**யாழ்ப்பாணம்.**

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 03 புதன்கிழமை 15.02.2023 கதிர் 350

## உயிர் தப்பப் பாய்ந்த நபர் சில்லில் நசியுண்டு சாவு!

எம்பிலிபிட்டிய – இரத்தினபுரி வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ்வீதியைவிட்டுவிலகிவிபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த இளைஞர் உயிர் தப்ப வெளியே பாய்ந்தபோது பஸ் சில்லில் சிக்கி உயிரிழந்தார். சம்பவத்தில் 17 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்

2

# மின்சார கட்டணம் 400 % அதிகரிப்பு

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் பகீர் தகவல்

இலங்கை மின்சார சபை வீட்டுப் பாவனையாளர்களுக்கான மின் கட்டணத்தை இன்று முதல் 400 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார். இந்த முடிவுக்குத் தான் அனுமதி வழங்கவில்லை என்றும், இருப்பினும் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களின் ஆதரவுடன் இலங்கை மின்சார சபையும் எரிசக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சரும் இந்த முடிவை எடுத்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

"ஆணைக்குழுவின் தலைவர் என்ற ரீதியில் எனது அனுமதி இல்லாமல் அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியில் மின்கட்டணத்தை இன்று முதல் 65 சதவீதத்தால் அதிகரிக்க இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழவின் மூன்று உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள் ளார்கள்" என்று ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவேன் எனவும் அவர் அறிவித்துள்ளார். பொதுவாக மின் கட்டணம் 65 வீதம் அதிகரிப்பு என்று தெரிவிக்கப்பட்டாலும் 30, 60 மற்றும் 90 மின்னலகு என்ற அடிப்படை யில் மின்சாரத்தை பயன் படுத்தும் வீட்டு மின் பாவனையாளர்களின் கட்டணம் 400 சதவீதத்தினால் அதிகரிக்கப் போகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

2

## உள்ளூராட்சித் தேர்தலை ரணில் ஒத்திவைக்க முயற்சிப்பது ஏன்?

### நெடுந்தீவில் காரணம் கூறினார் சிறீதரன் எம்.பி.

மக்களால் தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்ட தற்போதைய ரணில் விக்கிரமசிங்க, தான் ஜனாதிபதியாக மக்களால் தேர்வு செய்யப்படவேண்டும் என்ற எண்ணத்திலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போட முனைகின்றார்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச சபைக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் தேர்தல் செயற்பாட்டு அலுவலகமும் திறப்பு விழாவும் இன்று நெடுந்தீவில் நடந்தது.

இந்த நிகழ்வில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்தநிலையில் தபால் மூல வாக்களிப்பு நடத்துவதற்கான செயற்பாடுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் என்பதோடு கடந்த தேர்தல்களில் பல தடவை ஜனாதிபதியாகப் போட்டியிட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்.

2

##### பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதாகி விடுவிக்கப்பட்ட

## மருத்துவர் சிவரூபனுக்கு பளையில் பெரு வரவேற்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 4 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பளை மருத்துவமனை பொறுப்பு அதிகாரி ம.சிவரூபனுக்கு பளை மக்கள் சார்பில் இன்று பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆயுதங்களை வைத்திருந்தார், புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முன்றார் என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த மருத்துவர், கடந்த வாரம் கிளிநொச்சி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

பிணையில் வெளிவந்த அவர் பளை மருத்துவமனையில் மீண்டும் பொறுப்பதிகாரியாகத் தனது கடமைகளை ஏற்றுக்கொண்டார். அவருக்கு மலர் மாலை அணிவித்து பெரும் வரவேற்புக் கொடுத்தனர் ஊர் மக்களும் வைத்தியசாலை ஊழியர்களும்.

##### ஹெல்மெட்டுக்களால் தாக்கி

## குடும்பஸ்தர் படுகொலை; மாணவர்கள் மூவர் கைது!

தலைக்கவசங்களால் தாக்கி குடும்பஸ்தர் ஒருவரைக் கொலை செய்த 16 வயதான பாடசாலை மாணவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அளுத்கம, குருந்திபிட்ட பிரதேசத்தில் நேற்று மாலை வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை அடுத்து, 16 வயதான 3 மாணவர்களும் குறித்த குடும்பஸ்தரைத் தலைக்கவசங்களால் தாக்கிக் கொலை செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். வலகெதர – குருந்திப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

## இந்திய வீசா பரிசீலனை அலுவலகம் மூடப்பட்டது

இந்தியாவிற்கான விசா விண்ணப்பங்களை பரிசீலிக்கும் நிலையம் (ஐவிஎஸ் கொழும்பு) கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது என இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் அலுவலகம் (தூதரகம்) தெரிவித்துள்ளது.

நிலையத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு வரம்பு மீறல் சம்பவத்தைத் தொடர்ந்தே அது மூடப்பட்டுள்ளது.

விசா விண்ணப்பங்கள் தொடர்பில் ஏற்கனவே திகதிகளை பெற்றிருந்த விண்ணப்பதாரிகள் மீண்டும் புதிய திகதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஐவிஎஸ் நிறுவனத்தை தொடர்புகொள்ளவேண்டும் என்றும் தூதரகம் அறிவித்துள்ளது.

அவசர விசா அல்லது தூதரக தேவைகள் உடையவர்கள் தொலைபேசி மூலம் இந்திய உயர் ஆணையர் அலுவலகத்தைத் தொடர்புகொள்ள முடியும்.

2

## பதுளையில் மருத்துவர் கைது

பதுளை வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதாகும்போது அவரிடம் இருந்த 145 குளிசைகள் (கப்சியூல்ஸ்) பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவை போதைப் பொருளாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் மருத்துவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். பதுளை மயிலகஸ்தென்ன என்ற இடத்திலுள்ள தனது தனிப்பட்ட சிகிச்சை நிலையத்தில் வைத்து பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இந்த மருத்துவர் போதைப் பொருள் விநியோக்கிறார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

## இனத்தின் விடிவுக்காக பந்த பாசத்தைக் கடந்து இம்முறை வாக்களியுங்கள்!



(பழுவூரான்)

தமிழினத்தின் விடிவுக்காக அண்ணன், தம்பி மற்றும் சொந்த பந்தங்களை மறந்து உழைக்கக் கூடிய ஒருவரை உங்கள் வட்டார உறுப்பினராகத் தெரிவு செய்வது காலத்தின் கட்டாய தேவையாகும் என மட்டக்களப்பு மாவட்ட

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மின்சார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் பெரும்பான்மையான வீடுகள் இந்த மின் அலகுகளுக்குளேயே மின்சாரப் பயன்பாட்டைக் கொண்டுள்ளன. அதனால் குடும்பங்களின் மின் கட்டணம் எகிறப் போவதுடன், பொருட்களின் விலைகளும் மீண்டும் உயரப்போகின்றது என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மின் கட்டண அதிகரிப்புத் தொடர்பில் இன்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

24 மணித்தியாலங்களும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க வேண்டுமாயின் வருடாந்தம் 287 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 65 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான பரிந்துரையை முன் வைத்தது. நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை 65 சதவீதத்தால் மீண்டும் அதிகரித்தால் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்படுவார்கள், அது சமூக கட்டமைப்பில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும், ஆகவே வருடாந்தம் 142 பில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் 36 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்க பொது பயன்பாட்டு ஆணைக்குழு தீர்மானித்திருந்தது.

36 சதவீத மின்கட்டண அதிகரிப்பு தீர்மானத்தை இலங்கை மின்சார சபை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல் தரப்பினர் ஆணைக்குழவின் உறுப்பினர்களுக்குள் முரண்பாடுகளைஏற்படுத்தி,ஆணைக்குழுக்குள் இணக்கப்பாடற்ற தன்மையைத் தோற்றுவித்துள்ளார்கள்.

36 சதவீத மின்கட்டண அதிகரிப்பு அனுமதி தீர்மானத்தை புறக்கணித்து 65 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்வைத்த பரிந்துரைக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழவின் மூன்று உறுப்பினர்கள் அரசியல் அழுத்தங்களினால் எனது அனுமதி இல்லாமல் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்த மின்கட்டண அதிகரிப்பை இன்று முதல் அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சேவைக்கு ஒரு அலகிற்கு தற்போது அறவிடப்படும் 25 ரூபா 40 ரூபாவாகவும்,கைத்தொழிற்சாலைகளிடமிருந்து அறவிடப்படும் ஒரு அலகுக்கான கட்டணம் 50 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும்.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை அதிகரித்தால் மக்கள் போராட்டம் மீண்டும் தோற்றம் பெறும்.

நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்பு தீர்மானத்தை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். ஆணைக்குழுவின் சட்டத்திற்கு முரணாக செயற்படும் தரப்பினருக்கு எதிராகவும், மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் நீதிமன்றம் செல்வேன் என்றார்.

## உயிர் தப்பப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கமே இந்த விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## உள்ளூராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் தான் ஒரு தடவை என்றாலும் மக்களால் தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போட அவர் நினைக்கின்றார்.

உள்ளூராட்சிசபைத்தேர்தலைப்பிற்போட்டு அதன் மூலம் தான் மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் என்றும், அதற்காக தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களம் இறங்கியுள்ள வேட்பாளர்களைக் கொண்டு அடிமட்ட சிங்கள மக்களிடம் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவும் ரணில் முனைகின்றார்

நாங்கள் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட இனம். எமது உரிமைகளுக்காக கடந்த 80 வருடங்களுக்குமேலாகப் போராடிவருகின்றோம்.

நெடுந்தீவு பிரதேசம் எங்களது பூர்வீக அடையாளம். இதனையும் சிங்கள தேசம் ஆக்கிரமிக்க முயல்கின்றது. இப்போதும் கரையோரப் பகுதிகள் தொடர்ந்தும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

நெடுந்தீவுக்கான இறங்குதுறைகூட படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருப்பதுடன் பயணிகள் சுதந்திரமாக சென்றுவர முடியாத நிலை காணப்படுகின்றது – என்றார்.

நெடுந்தீவு கிழக்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபைக்காகப் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## இந்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் அமைந்துள்ள இந்திய வீசா நிறுவனத்தில் செவ்வாய்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. நிலையத்தில்காணப்பட்ட மடிக்கணனி உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்கள் 3 திருடப்பட்டுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சம்பவத்தின்போது அங்கு யாரும் காணப்படவில்லை என்றும் , சி.சி.டி.வி. காணொளிகள் பரிசோதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இனத்தின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டாரக் கிளை திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு வட்டார வேட்பாளர்களின் ஏற்பாட்டில் தேத்தாத்தீவில் நேற்று (15) இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

2020ஆம் ஆண்டுத் தேர்தலில் எங்களுடைய மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக படகு, மொட்டு சின்னங்களுக்கு ஒரு லட்சம் வாக்குகளை அளித்திருந்தனர். நாங்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, நீங்கள் 70 ஆயிரம் வாக்குகள்தான் எடுத்தீர்கள். ஆனால் வியாழேந்திரன், பிள்ளையான் போன்றோர் ஒரு லட்சம் வாக்குகள் எடுத்துள்ளனர். அவர்கள் தொல்பொருள் போன்ற விடயங்களுக்கெதிராக எந்தக் கருத்தும் முன்வைக்கவில்லை. அப்படியென்று சொன்னால் இந்த மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கும் மக்கள் தொல்பொருள் திணைக்களத்தை ஆதரிக்கிறார்கள் என்றுதானே அர்த்தம் எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எனவே 2020ஆம் ஆண்டு ய்த தவறை நிவர்த்தி செய்வதற்கு ஜனநாயக ரீதியில் வந்திருக்கின்ற முதலாவது சந்தர்ப்பம்தான் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலாகும். இங்கு வந்திருக்கின்ற நீங்கள் இக்கருத்தை ஏனையோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இந்தத் தேர்தல் சின்னம்மா, பெரியம்மாவுக்கான தேர்தலில்லை. மாறாக நாடாளுமன்றத்தில் மக்களுக்காகச் சாணக்கியன் பேசுவதற்கான அங்கீகாரம் என்பதை எமது மக்கள் வாக்களிப்பதன் ஊடாக வெளிப்படுத்த வேண்டும் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha , Colombo 10
0777755598 I 0701630209 I 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC SampathBank COMMERCIAL BANK HNB

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஏற்றுக்கொள்ள முடியாத உயர்வு

**இலங்கை மின்சார சபை மற்றும் எரிசக்தி, வலுச்சக்தி அமைச்சருக்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படாவிட்டாலும் மின் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளன என்ற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. ஆணைக்குழுவின் தலைவரான தனது சம்மதம் இல்லாமலேயே ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களின் இணக்கத்தைப் பெற்று இந்த மின் கட்டண உயர்வை நடைமுறைப்படுத்துகிறார்கள் என்று ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

**ஒருபுறத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களின் வகிபாகத்தையே கேள்விக்குள்ளாகும் அரசின் இந்தப் போக்கும் மறுபுறத்தில் தாளமுடியாத சுமையை மக்கள் முதுகில் ஏற்றப்போகும் மின் கட்டண உயர்வும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது; கடுமையான கண்டனத்துக்குரியது.**

**இலங்கை அனல் மின் உற்பத்தியிலேயே அதிகம் தங்கியிருப்பதன் காரணமாக டீசல் மற்றும் நிலக்கரியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்குப் பணம் தேவையாக உள்ளது. ஏற்கனவே டொலர் பற்றாக்குறையால் தவிக்கும் அரசிடம் போதிய பணம் இல்லாத காரணத்தால், 24 மணித்தியாலங்களும் தடையின்றி மின் சாரத்தை விநியோகிக்க வேண்டுமாயின் வருடாந்தம் 287 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் 65 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே மின் சக்தித் துறை அமைச்சரின் பரிந்துரை.**

**பொதுவாக மின் கட்டணம் 65 வீதம் அதிகரிப்பு என்று தெரிவிக்கப்பட்டாலும், திட்டமிடப்பட்டுள்ள இந்த அதிகரிப்பின்படி 30, 60 மற்றும் 90 மின்னலகு என்ற அடிப்படையில் மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கு மின்கட்டணம் 400 சதவீதத்தினால் அதிகரிக்கப்போகின்றது என்று விளக்குகின்றார் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர்.**

**பெரும்பாலான வீடுகள் இந்த மின்னலகுகளுக்குள்ளேயே தமது பயன்பாட்டைக் கொண்டிருக்கின்றன. அதுவும் வறிய குடும்பங்கள் அனைத்தும் தமது மின் பயன்பாட்டை திட்டமிட்டு இந்தக் குறைந்த அலகுகளுக்குள்ளேயே பேணி வருகின்றன. அதற்குக் காரணம் இதுவரையில் அது குறைந்த கட்டணத்தோடு பயன்படுத்தக்கூடியதாக இருந்ததுதான். அப்படியிருக்கும்போது திடீரென 400 சதவீதத்தால் இந்தக் கட்டணம் அதிகரிக்கப்படுவது குருவி தலையில் பனங்காய் போன்றது. அது தாங்க முடியாத சுமை.**

**இந்தக் கட்டண அதிகரிப்பு சமூக மட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். பிள்ளைகளின் கல்வி யில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும். வறிய குடும்பங்களிற்கு மின்நுகர்வைச் சாத்தியமற்றதாக்கும். அதுவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் இது மேலும் சோதனைகளைக் கொடுக்கும். பொருட்களின் விலை அதிகரிப்புக்கும் காரணமாகும். குறிப்பாக வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் உயரும்.**

**எனவே இந்தக் கட்டண முறை முற்றிலுமாக மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும். தற்போதைய உயர்வு உடனடியாக நிறுத்தி வைக்கப்படவேண்டும்.**

# இலங்கையர்கள் அனுப்பும் டொரல் தொகை அதிகரிப்பு

## கூறுகிறார் பந்துல குணவர்தன



வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களால் அனுப்பப்படும் அந்நிய செலாவணி கடந்த ஆண்டு ஜனவரியைவிட இவ்வாண்டு ஜனவரியில் 68.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதே போக்கு தொடருமாயின் இந்த வருட இறுதியில் 700 கோடி டொலருக்கும் அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

டொலர் நெருக்கடியின் காரணமாகவே மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சியடைந்த நிலைமை படிப்படியாகவே சீராகி வருகின்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தை விட இவ்வாண்டு ஜனவரியில் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களால் அனுப்பப்படும் அந்நிய செலாவணி 68.8 வீதத்தால் அதிகரித்துள்ளது. இது 50கோடி டொலரை அண்மித்துள்ளமை சாதகமான சமிஞ்ஞையாகும்.

தற்போது இது தொடர்ந்தும் அதிகரித்த போக்கிலேயே காணப்படுகிறது. இதே நிலைமை காணப்படுமாயின் இந்த வருட இறுதிக்குள் 700 கோடி டொலருக்கும் அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறான நிலைமை ஏற்படும் பட்சத்தில் மருந்து தட்டுப்பாடு ஏற்படாது.

எவ்வாறிருப்பினும் தற்போதைய நிலைமையில் அந்நிய செலாவணி இருப்பு 200 கோடி டொலரை விட அதிகரிக்கவில்லை. இவற்றில் சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்காகவே அதிக செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் அடிப்படையிலேயே சத்திர சிகிச்சைகளை முன்னுரிமை அடிப்படையில் காலம் தாழ்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் இது அவரால் தனித்து எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. வைத்திய நிபுணர்களுடன் கலந்தாலோசித்தே அமைச்சரவை இதனை அறிவித்துள்ளது. – என்றார்.

# இந்தோனேஷியாவுடனான ஒப்பந்தம் மீண்டும் நீடிப்பு

இந்தோனிசியாவின் தேசிய கண்காணிப்பு, மீட்பு முகவர் நிறுவனம் மற்றும் இலங்கையின் சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கும் இடையிலான ஒப்பந்தம் மீண்டும் 5 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் சிக்காக்கோ சமவாயத்தில் கையொப்பமிட்ட அரசாக எமது நாட்டில் வான்பரப்பில் பறப்பதற்காக அனைத்து விமானங்களுக்கான விமான நிலைய சேவைகள், விமான சேவைகள், விமானப் பயணங்கள் பற்றிய தகவல் சேவைகள் மற்றும் அபாய எச்சரிக்கை சேவைகள் வழங்க வேண்டியதுடன், அதற்கான கடப்பாடுகளையும் கொண்டுள்ளது.

கொழும்பு வான்பறப்பு தகவல் வலயத்தின் தென்கிழக்கு எல்லை இலங்கை மற்றும் இந்தோனேசியா கூட்டாக பயன்படுத்தி வருகின்ற அயல் நாடாகும். குறித்த வலயத்தில் கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் பொறுப்பு இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் சிக்காக்கோ சமவாயத்துக்கமைய கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பைப் பலப்படுத்துவதற்காக ஆட்புல பூகோளப் பிரதேசத்தில் கண்காணிப்பு மற்றும் மீட்பு அலகுகளுக்கு உள்நுழைகின்ற நிபந்தனைகளைக் குறிப்பிட்டு அருகிலுள்ள அரசால் அயல் நாட்டு அரசுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வது அவசியமாகும்.

அதற்கமைய, இலங்கையில் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை மற்றும் இந்தோனிசியா குடியரசின் தேசிய கண்காணிப்பு மற்றும் மீட்பு முகவர் நிறுவனத்துடன் 5 வருடகாலப்பகுதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2018ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்டதுடன், மேற்படி காலப்பகுதி தற்போது முடிவடைந்துள்ளது.

இருதரப்பினர்களுக்கிடையேயான ஒத்துழைப்புக்களைத் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு இயலுமாகும் வகையில் கடந்த ஜனவரி 23ஆம் திகதி தொடக்கம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் 5 வருடங்களுக்கு நீடிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் டிஜிற்றல் தொழில்நுட்பம் அறிமுகம்

ஓமான் வேலைவாய்ப்பிற்காக இலங்கையர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதத்தை தடுக்கும் நோக்கில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தை விரிவான முறையில் பயன்படுத்த தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு திட்டதிட்டுள்ளது.

ஓமான் சென்றுள்ள அமைச்சர் மனு நாணயக்கார அந்நாட்டின் உயர் அதிகாரிகளுடனான சந்திப்பின் போது இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

வெளிநாட்டுத் தொழில்துறைக்காக டிஜிற்றல் தொழில்நுட்பத்தை உயர்ந்தபட்ச அளவில் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுமாறன் கருத்தால் மீண்டும் இனவாதம் தோன்றம் பெறலாம்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



13 ஆம் அரசமைப்பு திருத்தம் பாகுபாடின்றி முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அதற்காக முத்தரப்பு பேச்சு ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணின் தலைவர் கூறியுள்ளார்.

இந்த பேச்சில் தமிழர் தரப்பு, இந்திய அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்க தரப்பில் பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலை புலிகளுடன் நீண்டகால தொடர்பைக் கொண்ட பழ. நெடுமாறனின் தெரிவித்த கருத்தால் மீண்டும் இனவாதம் தோன்றலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது கருத்து உண்மையாக இருந்தாலும் அதன் உறுதிப்பாட்டை இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



# இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்த விரும்பும் அமெரிக்கா

## அதிபர் பைடன் தெரிவிப்பு

இந்தியா உடனான உறவு மேலும் வலுப்பெற அமெரிக்கா விரும்புவதாக அந்நாட்டின் அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் போயிங் விமான நிறுவனத்திடம் இருந்து டாடா குழுமத்தின் ஏர் இந்தியா விமான நிறுவனம் 290 விமானங்களை வாங்க முடிவு செய்து அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுது. இதற்கான அறிவிப்புமுறைப்படி வெளியிடப்பட்டதை அடுத்து, பிரதமர் நரேந்திர மோடியும் அமெரிக்க அதிபர் ஜோபிடனும் தொலைபேசி வாயிலாக உரையாடினர்.

அப்போது, இரு தலைவர்களும் பேசியது குறித்து அந்நாட்டு தலைமை செய்தித் தொடர்பாளர் ஜீன் பீர்ரி கூறியதாவது:

''இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான வியூக முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப உறவு குறித்து இருவரும் விவாதித்தனர்.

இரு தரப்பு உறவை மேலும் வலுப்படுத்த இருதலைவர்களும் ஒப்புக்கொண்டனர். இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த க்வாட் போன்ற சர்வதேச அமைப்புகளில் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதித்தார்கள். இந்த ஆலோசனை மிகச் சிறப்பாக இருந்தது.

போயிங் விமான நிறுவனத்திடம் இருந்து ஏர் இந்தியா 200க்கும் மேற்பட்ட விமானங்களை வாங்க இருப்பது குறித்து அதிபர் ஜோ பைடன் பேசினார். அப்போது, இந்த விற்பனை 10 லட்சம் அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்துள்ளதாக அவர் கூறினார். அமெரிக்காவின் 44 மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் இதனால் பலனடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியா – அமெரிக்கா இடையேயான இரு தரப்பு உறவை மேலும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இரு தலைவர்களும் வலியுறுத்தினர்'' இவ்வாறு அமெரிக்க தலைமை செய்தித் தொடர்பாளர் ஜீன் பெர்ரி தெரிவித்தார்.

# அமெரிக்க அதிபர் தேர்தலில் இந்திய வம்சாவளி பெண்

## கமலா ஹரிஸைத் தொடர்ந்து களம்குதிப்பு



2024ஆம் ஆண்டுக்கான அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக மற்றொரு இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரான நிக்கி ஹாலே அறிவித்துள்ளார். ஏற்கனவே ஜனநாயகக் கட்சி சார்பில் கமலா ஹரிஸ் என்ற இந்திய வம்சாவளிப் பெண் அமெரிக்கத் துணை ஜனாதிபதியாகப் பதவி வகித்து வரும் நிலையில், அதிபர் போட்டிக் களத்தில் நிக்கியும் குதிக்கப் போகும் தகவல் வெளியாகியுள்ளது.

நிக்கியின் நுழைவால் குடியரசுக் கட்சியில், அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கும் இவருக்கும் இடையே கடும்போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த வருடம் நடக்கவுள்ளது. இத்தேர்தலில் மீண்டும் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப். குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட டிரம்ப் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், இப்போது அதே கட்சியைச் சேர்ந்த வரும் ஐநாவுக்கான அமெரிக்க பிரதிநிதியாக இருந்தவருமான இந்திய வம்சாவளி பெண் நிக்கி ஹேலேவும் அதிபர் தேர்தலில் போட்டியிட போகிறேன் என்று அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் பிரதான கட்சிகள் என்றால் ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சிகள்தான். ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் தற்போது அமெரிக்க அதிபராக உள்ளார். அடுத்த ஆண்டு அவரின் பதவிக்காலம் முடியவுள்ளதால் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் அதிபர் தேர்தல் நடக்கவுள்ளது. அதிபர் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் முதலில் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவேண்டும்.

கட்சி மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் கட்சியின் அதிபர் வேட்பாளரை தேர்ந்தெடுப்பார்கள். அந்த வகையில் குடியரசு கட்சி சார்பில் டிரம்ப் போட்டி என அறிவித்துள்ள நிலையில் இப்போது நிக்கியும் களத்தில் குதித்துள்ளார். இதனால் அமெரிக்க அதிபர் தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

வீடியோ ஒன்றை வெளியிட்ட நிக்கி, நான் நிக்கி ஹேலே. நான் வரவிருக்கும் அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறேன். நாட்டின் நிதிப் பொறுப்பை மீட்டெடுக்கவும், நமது எல்லையைப் பாதுகாக்கவும், நமது நாட்டை, நமது பெருமை மற்றும் நமது நோக்கத்தை வலுப்படுத்தவும் புதியதலைமுறைதலைமைதேவைப்படும் நேரம் இது என்று பேசியுள்ளார்.

51 வயதாகும் நிக்கி ஹேலே இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். இவரின் தந்தை அஜித் சிங் பஞ்சாப்பை பூர்வீகமாக கொண்டவர். முதலில் கனடாவில் குடியேறிய அஜித் சிங் அதன்பின் குடும்பத்துடன் அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்துள்ளார். அமெரிக்காவின் தெற்கு கரோலினா பகுதியில் வசித்துவந்துள்ளனர்.

இதே தெற்கு கரோலினா மாகாண ஆளுநராக தனது 39 வயதில் பதவியேற்று அமெரிக்காவின் இளம் ஆளுநர் என்ற சாதனையை கடந்த 2011ல் படைத்தார் நிக்கி ஹேலே.

இரு முறை இம்மாகாணத்தில் சிறப்பாக செயல்பட்ட நிக்கி, டிரம்ப் அதிபராக இருந்தபோது 2017 ஜனவரி முதல் 2018 டிசெம்பர் வரை ஐநா சபைக்கான அமெரிக்க பிரதிநிதியாகப் பணியாற்றியுள்ளார்.

# நிலநடுக்கம் பாதித்த இடங்கள் எங்கும் வீசுகின்றது துர்நாற்றம்

## இடிபாடுகளுக்குள் இருந்த அபயக் குரல்களும் எழுகின்றன

துருக்கியில் பெப்ரவரி 6ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. துருக்கு மற்றும் சிரியாவில் இதுவரை 41 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். நிலநடுக்கம் ஏற்பட்டு 10 நாட்களை நெருங்கும் சூழலில் ஊரெங்கும் துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது.

மலைபோல் கட்ட்டக் கழிவுகள் குவிந்துகிடக்க இன்னமும் சில இடிபாடுகளுக்கு அடியிலிருந்து அபயக் குரல்கள் கேட்கின்றன. ஆனால் அவர்களை நெருங்கும் வழியின்றி மீட்பாளர்கள் திணறி வருகின்றனர்.

துருக்கியில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள சல்மான் அல்தீன் என்பவர், நான் அன்டாக்கியா பகுதியில் கடந்த ஒரு வாரமாக பணியில் ஈடுபட்டுள்ளேன்.

இத்தனை சாவுகளையும் இவ்வளவு உடல்களையும் என் ஆயுளில் பார்த்ததில்லை. அர்மகடான் படத்தில் வரும் காட்சிகள் போல் இங்கே நிலைமை இருக்கிறது. இந்த நகரம் முழுவதுமே பிண துர்நாற்றம் வீசுகிறது என்று அழுகையுடன் தெரிவித்தார்.

இடிபாடுகளில் சிக்கியிருப்போரை மீட்பதைக் காட்டிலும் வீடின்றி உறைபனியில் உயிருடன் தவிப்போருக்கு உதவிகளைச் செய்வதில் மீட்புக் குழுவினரின் கவனம் திரும்பியுள்ளது. ஆனாலும் தெற்கு துருக்கியில் ஆங்காங்கே இடிபாடுகளுக்கு இடையே இருந்து இன்னும் மெல்லிய அபயக் குரல்கள் கேட்பதாக மீட்புக் குழுவினர் கூறுகின்றனர். அவ்வாறு கேட்கும் பகுதிகளில் மீட்புக் குழுவினர் உதவிகளைச் செய்து வருகின்றனர். செவ் வாய்க்கிழமை மட்டும் துருக்கியில் 9 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். 77 வயது முதியவர் 18 வயது இளைஞர் ஆகியோரும் அவர்களில் அடக்கம்.

இந்த நிலையில் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய துருக்கி அதிபர் எர்டோகன், இப்போது இங்கு நிலைமை கட்டுக்குள் உள்ளது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இயற்கைப் பேரிடரை துருக்கி எதிர்கொண்டுள்ளது. இது மனித குலத்திற்கே ஒரு சவால்தான். எங்கள் நாடின் ஒவ்வொரு குடிமகனுக்கு தேவையான பொருள் மற்றும் நிதியுதவியையும், உணர்வுப்பூர்வ ஆறுதலையும் தருவோம் என்றார்.

துருக்கி, சிரியாவில் குழந்தைகள் பலரும் உளவியல் சிக்கலுக்கு ஆளாகியுள்ளனர். ஒரே நாளில் தாங்கள் வாழ்ந்த வீடு, உடைமைகளை இழந்து தெருக்களில் தஞ்சமடைந்தது, மிகப் பெரிய சத்தம், கட்டட இடிபாடுகள் என அவர்கள் வெகுவாகவே பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிரியாவின் அலெப்போ நகரைச் சேர்ந்த 9 வயது சிறுவன் தூக்கத்தில் திடீரென அலறி எழுந்து அப்பா நிலநடுக்கம்.. நிலநடுக்கம் என்று அழுவதாக அவருடைய தந்தை ஹசன் மோஸ் கூறுகிறார். துருக்கி, சிரியாவில் 7 மில்லியன் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

துருக்கி, சிரியாவில் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பூகம்ப பாதிப்பு பகுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர். அப்பகுதிகள் வாழத் தகுதியற்ற பகுதியாக மாறிவிட்டதாக மக்கள் கூறுகின்றனர்.

முன்னதாக நேற்று ஐ.நா. சிரியாவுக்கு அடுத்த 3 மாதங்களுக்கு தேவைப்படும் உதவிகளைச் செய்ய 397 மில்லியன் டொலர் தேவைப்படுவதாகவும் உலக நாடுகள் தாராளமாக உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தது. சிரிய அதிபர் பார் அல் அசாத், துருக்கி மற்றும் வட மேற்கு சிரியா இடையேயான பாப் அல் சலாம், அல் ரா ஆகிய இரண்டு எல்லைகளையும் திறந்துவிட முடிவு செய்துள்ளார். எல்லைகளில் நிலவும் கெடுபிடி காரணமாக சர்வதேச உதவிகள் சிரியாவுக்கு சென்று சேர்வதில் சிக்கல் நிலவிய சூழலில் அதிபர் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

# 2026இில் துபாயில் பறக்கும் கார் சேவை

## அறிமுகமாகும் என்று ஆட்சியாளர் அறிவிப்பு

பறக்கும் கார்களை பொதுப் பயன்பாட்டுக்கு கொண்டுவர உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டுவரும் நிலையில், 2026ம் ஆண்டுக்குள் துபாயில் பறக்கும் டாக்ஸிகள் அறிமுகப்படுத்தப்படும் என்று ஐக்கிய அரபு அமீரகத்தின் துணைத் தலைவரும் பிரதமரும் துபாய் ஆட்சியாளருமான சேக் முகமது பின் ரஷீத் அல்மக்தூம் தெரிவித்துள்ளார். பறக்கும் டாக்ஸிகளுக்கான நிலையங்கள் (வெர்டிபோர்ட்) அமைக்க அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்புதல் வழங்கினார். முதற்கட்டமாக பறக்கும் டாக்ஸி சேவையானது துபாய் சர்வதேச விமான நிலையம், டவுன்டவுன் துபாய், பாம் ஜூமேரா, துபாய் மெரினா ஆகிய 4 பகுதிகளை இணைக்கும் வகையில் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறக்கும் டாக்ஸி சேவை குறித்து துபாயின் பொதுப் போக்குவரத்து ஆணையத்தின் சிஇஓ அகமது கூறுகையில், ஒரு பைலட், 4 பயணிகள் அமர்ந்து பயணிக்கும் வகையில் பறக்கும் டாக்ஸி இருக்கும். மணிக்கு 300 கிமீ வேகத்தில் செல்லும். துபாய் – அபுதாபி, உட்பட மற்ற அமீரகங்களுக்கு இடையே சேவை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

# சவூதியின் முதல் பெண் விண்வெளி விராங்கனை

சவுதி அரேபியா முதல்முறையாக பெண்விண்வெளிவீராங்கனைஒருவரை விண்வெளிக்கு அனுப்ப உள்ளது.

சவுதி அரேபியா அரசு கடந்த ஆண்டுவின் 2030 என்ற விண்வெளித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதற்காக விண்வெளி வீரர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. விண்வெளி தொடர்பான ஆராய்ச்சிகளில் சவுதி அரேபியாவுக்கும், ஐக்கிய அமீரகத்துக்கு இடையே கடந்த சில ஆண்டுகளாக போட்டி தொடர்ந்து வருகிறது. மேலும், பெண்களுக்குஎதிரானஅடக்குமுறையை கொண்ட நாடு சவுதி என்ற பழைய அடையாளத்தையும் அழிக்க சவுதி தொடர்ந்து முயன்று வருகிறது.

இந்த நிலையில், விண்வெளிக்கு முதல் முறையாக விண்வெளி வீராங்கனையை சவுதி அரேபியா அனுப்ப உள்ளது. இதனை சவுதி அரசு ஊடகம் உறுதி செய்துள்ளது.



இதுகுறித்து சவுதி அரசு ஊடகம் ஒன்று, 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) செல்லும் சவுதி விண்வெளி வீரர் அலி அல்–கர்னியுடன் சவுதியின் விண்வெளி வீராங்கனையான ரய்யானா பர்னாவி பயணிக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சவுதி அரேபியாவில் பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன. முகம், உடல் தெரியாத அளவுக்கு ஆடைகள் அணிதல், கார் ஓட்டத் தடை, விளையாட்டுப் போட்டிகளை நேரடியாகப் பார்க்கத் தடை, சினிமா பார்க்கத் தடை உள்ளிட்ட பல கட்டுப்பாடுகள் பெண்களுக்கு இருந்தன. ஆனால், சவுதி அரேபியாவின் இளவரசர் முகம்மது பின் சல்மான் ஆட்சிக்குப் பின் பல்வேறு புதிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இவர் சமீபத்தில் பெண்கள் கார் ஓட்டுவதற்கும், ஓட்டுநர் உரிமம் பெற்றுக்கொள்ளவும் அனுமதி அளித்தார். பெண்கள் திரையரங்குகளில் சென்று சினிமா பார்க்கவும் அனுமதி அளிக்கப்பட்டது. இந்த நிலையில், சவூதி பெண் ஒருவர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்ல இருக்கிறார்.

# பிரபாகரன் உயிருடன் இருந்தாரானால் ஜனநாயக அரசியலுக்கு வரவேண்டும்




## ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் ஆசை இது

புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்தால் ஜனநாயக வழிக்கு திரும்பி நாடாளுமன்ற அரசியலில் ஈடுபட வேண்டும் என்று ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜித் மௌலவி தெரிவித்தார்.

பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று தமிழகத் தலைவர் பழ நெடுமாறன் பரபரப்பு தகவல் வெளியிட்டு உள்ள நிலையில் புதன்கிழமை இது தொடர்பாக ஊடகங்களுக்கு முபாறக் அப்துல் மஜித் மௌலவி தெரிவித்ததாவது:

பிரபாகரன் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அது அவருக்குத்தான் அவமானம்.

அவர் திரும்பி வந்தால் ஜனநாயக வழிக்கு திரும்பி நடக்க வேண்டும். நாடாளுமன்ற தேர்தல் கேட்க வேண்டும்.

நான் அவரிடம் இக்கோரிக்கையை முன்வைப்பேன்.

அவ்வாறு அவர் நாடாளுமன்ற அரசியலுக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு அவரால் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக கேட்போம். ஆனால் அவரால் முஸ்லிம் மக்களுக்கு எந்த தீர்வையும் தர முடியாது.

அவரால் மாத்திரம் அல்ல தமிழ் தேசிய கூட்டமைப்பால்கூட முஸ்லிம் மக்களுக்கு எந்த தீர்வையும் தரவே முடியாது.

இந்தியாவில் நேதாஜி இறந்த போதும் அவர் உயிருடன் இருப்பதாக மக்கள் மத்தியில் கதைகள் பரப்பப்பட்டன. அவ்வாறான ஒன்றுதான் இது என்று நான் நம்புகின்றேன்.

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து தாய்லாந்துடன் 3 ஆம் சுற்றுப் பேச்சு!

## அமைச்சர் பந்துல தகவல்



இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக கடந்த ஜனவரி 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற மூன்றாம் சுற்று பேச்சின் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி அமைச்சரவைக்கு விளக்கமளித்துள்ளார் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இருதரப்பினரும் பலதுறைகளில் பொருளாதார ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவதன் மூலம் மேலும் விருத்திசெய்யக்கூடிய பொருளாதார சாத்தியவளங்கள் மற்றும் முழுமைப்படுத்த வேண்டிய பொருளாதாரக் கட்டமைப்புக்களை அடையாளங்கண்டு தற்போது காணப்படுகின்ற இருதரப்பு வர்த்தகப் பெறுமதியான 5 கோடியே 50 லட்சம் அமெரிக்க டொலர்களை, 150 கோடி டொலர்கள் வரைக்கும் அதிகரிக்கின்ற நோக்குடன் இலங்கை மற்றும் தாய்லாந்துக்கு இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான அடிப்படை நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய, பண்டங்கள், ஆற்றல்வளம் தொடர்பான ஒழுங்குகள், சேவைகள், முதலீடுகள், பொருளாதார ஒத்துழைப்புக்கள், பொருளாதார பரிகாரங்கள், சுங்க நடவடிக்கை முறைகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்காக கடந்த 2018ஆம் ஆண்டு ஜூலை 3 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2018 ஜூலை மாதம் முதலாம் சுற்றுப் பேச்சு இலங்கையிலும், இரண்டாம் சுற்றுப் பேச்சு 2018 செப்ரெம்பர் மாதம் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலும் நடத்தப்பட்டன. அதன் மூன்றாம் சுற்றுப் பேச்சு கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்தப்பட்டது.

மேற்படி பேச்சுகளின் முன்னேற்றம் பற்றி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த தகவல்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டன. – என்றார்.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை ரத்துச் செய்வோம்

## ஆட்சிக்கு வந்தால் இது நடக்கும் என்கிறார் சுனில் ஹந்துநெத்தி



1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதியின் உரிமைச் சட்டத்தின் ஊடாக முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள் அனுபவிக்கும் சலுகைகள் தமது அரசாங்கத்தின் கீழ் இரத்து செய்யப்படும் என தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டு வரும் நிலையில் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்களுக்கு ஆடம்பர வாழ்க்கை வாழ்வதாக அந்தக் கட்சியின் உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

பொது மக்களுடன் ஒப்பிடுகையில், இவர்களுக்கு எந்தவிதமான நிதிச் சிக்கல்களும் இல்லாத இந்த நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் தொகைகள் ஆண்டுதோறும் அதிகரிக்கப்படுகின்றன எனவும் சுனில் ஹந்துநெத்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் குறித்த சட்டத்தின் மூலம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வாடகை இல்லா வசிப்பிடம், மாதாந்த கொடுப்பனவு, போக்குவரத்து வசதிகள் மற்றும் ஓய்வூதியம் போன்றவை வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காரைநகர் – ஊர்காவற்துறை இடையிலான

# கடற்பாதை சேவையை கேட்கிறது பிரதேசசபை

காரைநகர் – ஊர்காவற்துறை இடையிலான கடற்பாதை சேவை மட்டுப்படுத்தப்பட்டதால் அந்தப் பாதையை பயன்படுத்தும் பல தரப்பினரும் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அந்த பாதையை காரைநகர் பிரதேச சபையிடம் தந்தால் அதனை திறம்படச் செய்வோம் என காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். பிரதேச சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

காரைநகரில் இருந்து ஊர்காவற்துறைக்கு பயணிக்கும் உத்தியோகத்தர்களாக இருந்தாலும் சரி பொதுமக்களாக இருந்தாலும் சரி தற்போது பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இயக்கப்படுகின்ற குறித்த கடற்பாதை கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தால் இயங்காத நிலையில் காணப்பட்டது அதற்கான மண்ணெண்ணெயை நாங்கள் பெற்றுக்கொடுத்து பாதையை இயங்கச் செய்தோம்.

தற்போது மண்ணெண்ணெய் செலவிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் பாதை சேவையின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சேவை நடைபெறுகிறது. இதனால் காரைநகரில் இருந்தும் ஏனைய பகுதிகளில் இருந்தும் ஊர்காவற்துறையில் உள்ள நீதிமன்றம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு கடமைக்கு செல்லும் ஊழியர்களாக இருந்தாலும் சரி பொதுமக்களாக இருந்தாலும் சரி தனியார் படகுக்கு ஒருவழிப் பயணத்துக்கு நூறு ரூபா கொடுத்து தமது வாகனங்களுடன் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்கின்றனர். இவ்வாறு அவர்கள் ஒரு மாதத்தில் 20 நாள்களுக்கு கடமைக்கு செல்வார்களானால் அவர்களது சம்பளத்தில் இருந்து இருவழி பயணத்துக்கு 200 ரூபா செலவிடப்படுகிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அவர்கள் சம்பள உயர்வும் இல்லாமல் அவஸ்தைப்படும் நிலையில் அவர்கள் தமது குடும்ப சுமையை எவ்வாறு சுமப்பார்கள் என சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த பாதையை இயக்குவதற்கு நாங்கள் 04.10.2022 நடைபெற்ற விசேட கூட்டத்திலே 58 ஆவது இலக்க தீர்மானம் மூலம் எமது சபையிடம் அந்தப் பாதையை ஒப்படைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கியிருந்தோம்.

ஆனால் அவர்கள் எமக்கு இது வரை எந்தவிதமான பதிலும் வழங்கவில்லை. இந்தப் பாதையை எம்மிடம் வழங்கினால் சிறப்பான சேவையை எம்மால் வழங்க முடியும். அதுமட்டுமன்றி நிதிப் பிரச்சினை ஏற்படும் போது புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற உறவுகளிடமும் எமது பகுதிகளில் வாழ்கின்ற செல்வந்தர்களிடமும் நிதியை பெற்று சிறப்புடன் சேவையை வழங்க முடியும். – எனக் கூறியுள்ளார்.

# சரியான நேரத்தில் மீண்டும் நான் வெளியே வருவேன்!

## மஹிந்த அதிரடி அறிவிப்பு



சரியான நேரத்தில் வெளியே வருவேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சிநேகபூர்வ சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

''நான் இப்போது வெளியே வர விரும்பவில்லை. எப்படியும் சரியான நேரத்தில் வெளியே வருவேன். பிறகு என்ன நடக்குமென்று பார்ப்போம்" எனவும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

நான் இப்போது வெளியே வர வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் நாம் ஓர் இளம் தலைமுறையை உருவாக்கியுள்ளோம். அவர்கள் இந்த நடவடிக்கைகளைத் தொடர வேண்டும். எப்படியிருந்தாலும், நான் சரியான நேரத்தில் வெளியே வருவேன்.

பின்னர் என்ன நடக்குமென்று பார்ப்போம் என்றும் கடுமையான தொனியில் தெரிவித்துள்ளார்.

# மரக்கறி நுகர்வு பெரும் வீழ்ச்சி

நாட்டில் மரக்கறி நுகர்வில் பெரு வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மரக்கறி நுகர்வை 50 வீதத்தால் குறைத்துக் கொண்டுள்ளனர் எனவும், மரக்கறி மொத்தவிலை திடமற்ற நிலையில் காணப்படுவதாகவும் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் செயலாளர் ஐ.ஜீ.விஜயானந்த தெரிவித்துள்ளார்.

மரக்கறி மொத்த விற்பனை நிலை குறைந்துள்ள காரணத்தால் கொள்வனவாளர்கள் மரக்கறி வகைகளைப் போக்குவரத்து செய்வதிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை ஏற்றத்தை தொடர்ந்து மரக்கறி கொள்வனவு செய்ய வருவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு மரக்கறி விலைகள் உயர்வடைந்த காரணத்தால் மக்கள் தங்களது நுகர்வை அரைவாசி அளவில் குறைத்துக் கொண்டுள்ளனர்.

ஒரு கிலோகிராம் போஞ்சி 350 ரூபாவிற்கும், ஒரு கிலோகிராம் கறிமிளகாய் 450 ரூபாவிற்கும், கரட் ஒரு கிலோகிராம் 100 முதல் 120 ரூபாவிற்கும், லீக்ஸ் ஒரு கிலோகிராம் 220 ரூபாவிற்கும், கத்தரி ஒரு கிலோகிராம் 120 முதல் 150 ரூபாவிற்கும், கோவா ஒரு கிலோகிராம் 30 முதல் 40 ரூபாவிற்கும், பச்சை மிளகாய் ஒரு கிலோகிராம் 200 முதல் 230 ரூபாவிற்கும் மொத்த விற்பனையின் போது விற்பனை செய்யப்பட்டுள்ளன.

# பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்பது இனவாதத்தை மீண்டும் தூண்டும் செயல்!

## நவீன் திஸாநாயக்க சாடல்



விடுதலைப்புலிகளின்தலைவர்பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்ற செய்தி மீண்டும் இனவாதத்தைத்தூண்டுவதற்கானமுயற்சியாக இருக்கலாம். அந்தச் செய்தியை இராணுவம் மறுத்துள்ளது. மீண்டும் பிரபாகரன் தலைதூக்கப்போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளின்தலைவர்பிரபாகரன் உயிரோடு இருப்பதாக இந்தியாவில் தமிழ் நாட்டைச்சேர்ந்த நெடுமாரன் தெரிவித்திருக்கிறார்.

அவர் எந்த அடிப்படையில் தெரிவித்தார் என்று எமக்குத் தெரியாது. என்றாலும் பிரபாகரன் உயிராஹிடு இல்லை என்பதை எமது இராணுவம் உறுதிப்படுத்தி இருக்கிறது. அதனால் இது தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

என்றாலும் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்ற தகவல் வடக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கான முயற்சியாக இருக்கலாம்.

எவ்வாறு இருந்தாலும் மீண்டும் பிரபாகரன் தலைதூக்கப்போவதில்லை. அதேநேரம் அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதற்குஅழுத்தம்பிரயோகிப்பதற்கு இவ்வாறான செய்தியை பரப்புவதாகத் தெரிவிக்க முடியாது. ஏனெனில் 13 ஆம் திருத்தம் எமது அரசமைப்பில் இருக்கும் விடயமாகும்.

மேலும் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் நாடு பிளவுபடும் என சிலர் தெரிவித்து வருகின்றனர். ஆனால் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் நாடு பிளவுபடாது என 1987 இல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருகிறது. அன்று மிகவும் பயங்கரமான நிலைமையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டி ருந்தது. பிரபாகரன் பெரும் செல்வாக்குடன் இருந்தார்.

வடக்கு கிழக்கு மாகாணம் பிரபாகரனின் ஆதிக்கத்துக்கு கீழே இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையே இருக்கிறது.

வடக்கு,கிழக்கு மாகாணம் இணைக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அங்குள்ள சிங்கள முஸ்லிம் மக்கள் உறுதியாக இருக்கின்றனர்.

அத்துடன் மாகாணங்களுக்கு பொலிஸ். காணி அதிகார வழங்கப்பட்டுள்ளபோதும் நிதி அதிகாரம் வழங்கப்படவில்லை. நிதி அதிகாரம் இல்லாமல் சமஷ்டி ஆட்சியை மேற்கொள்ள முடியாது. இந்தியாவில் சமஷ்டி முறையே இருக்கிறது. ஆனால் எமது நாட்டில் மாகாண முறையே இருக்கிறது. அதனால் மாகாண அதிகாரங்கள் அரசமைப்பில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டி ருக்கிறது.

அதனால் மாகாணங்களுக்கு பொலிஸ். காணி அதிகாரங்களை வழங்குவதன் மூலம் நாடு பிளவுபடப்போவதில்லை. 13 ஐ முழுமையாக அமுல்படுத்தப்போவதாக தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்யும் அளவுக்கு அதில் ஒன்றும் இல்லை. – என்றார்.

# வடக்கில் கடலட்டை பண்ணைகள் அமைப்பு இயற்கை வளத்தைக் கடுமையாக பாதிக்கும்!

## அன்ரனி ஜேசுதாசன் எச்சரிக்கை




விஞ்ஞானஆய்வின்படிவடபகுதியில் கடல் அட்டை பண்ணைகள் அமைப்பது இயற்கை வளத்தை பாதிக்கும் என வடமாகாண கடற்தொழில் இணையத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜெசுதாசன் தெரிவித்துள்ளார்.

கடலட்டைப் பண்ணையால் பாதிக்கப்படுகிற வட மாகாண மீனவ பிரதிநிதிகளை உள்ளடக்கி ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில் –

அந்தக் கலந்துரையாடலில் கடலட்டை பண்ணை கடற்தொழிலாளர்களுக்கு சாதகமானதா? பாதகமானதா? என்று இந்த அட்டைப் பண்ணை தொடர்பில் ஆராய்ந்து இருந்தோம்.

ஒட்டுமொத்த விஞ்ஞான பூர்வமான கருத்தின்படி, இலங்கை கடற்பரப்புக்குள் குறிப்பாக வடபகுதியில் அட்டைப்பண்ணை உருவாக்குவது ஒரு முறையற்ற விடயமாக அது கடற்தொழிலாளர்களுடைய எதிர்கால வாழ்வைப் பாதிக்கின்ற ஒரு விடயமாகக் கலந்துரையாடப்பட்டது.

ஆகவே,இந்தக்கலந்துரையாடலில் இறுதியிலே எடுக்கப்பட்ட முடிவு,வடபகுதியிலேமேற்கொள்ளப்படுகின்ற அட்டைப் பண்ணைகள் பாரம்பரிய மீன்பிடி முறைக்கு எதிரானதாகவும் இயற்கை வளங்களை அழிக்கின்றதாகவும் மீன்கள் புலம்பெயரும் இடங்களைத் தடுக்கின்ற – மீன்கள் முட்டையிடுகின்றகுஞ்சுபொரிக்கின்ற இடங்கள் மறுக்கப்படுகின்றதாக காணப்படுகிறது.

தொடர்ச்சியாக இலங்கையில் வடபகுதியில் 17 விதமான அட்டைகள் காணப்படுகின்றன.

அந்த அட்டைகள் அழிக்கப்படுவதற்கு இந்த அட்டை பண்ணைகள் ஒரு காரணமாக இருக்கும் என முடிவெடுக்கப்பட்டது.

ஆகவே இதுதொடர்பாக அமைச்சரும் ஏனைய நக்ரா நாறா நிறுவனங்கள்கடற்தொழில்பரிசோதர்கள் இது தொடர்பில் ஆழமான ஆய்வு செய்து உடனடியாக இந்த அட்டை பண்ணைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முக்கியமாக சீனாவினுடைய அட்டைகுஞ்சுகளை கொண்டுவந்து தான்இந்தஅட்டைபண்ணைகளிலே அட்டைகள் வளர்க்கப்படுகின்றன. இது கலப்பு முறையான ஒரு செயற்பாடாக காணப்படுகின்றது.

இந்த விடயம் சாதாரணமாக வடபகுதியில் இருக்கின்ற இயற்கையாகஉருவாகின்றஅட்டைகளினுடைய அழிவுக்கு இது காரணமாக இருக்கின்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்ற அமைப்பின் கருத்துபடி, ஓர் ஆழமான ஆய்வைச் செய்து இந்த அட்டைப் பண்ணைகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் தற்பொழுது அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் தொழில்கள் கடற்தொழிலாளர்களின்தொழில்இடங்கள் மறுக்கப்படுகின்றன. மீன்களின் உற்பத்தியும் தடுக்கப்படுகின்றது இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.– எனக் கூறியுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுவது ஜனநாயகக் கொள்கைக்கு முரணானது!

## அடித்துக்கூறுகிறார் சாகர காரியவசம்



தேர்தலை பிற்போடுவது ஜனநாயக கொள்கைக்கு முரணானது. தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும். மக்களின் ஜனநாயக உரிமையைப்பாதுகாக்கஅர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெறுவோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத்தேர்தல் தொடர்பில்தேர்தல்கள்ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், அரசியல்கட்சிசெயலாளர்களுக்கும் இடையில் தேர்தல்கள் ஆணைக்குழு காரியாலயத்தில் இடம்பெற்ற பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகித்ததாகக் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றதாகும்.

ராஜபக்சர்கள் உரிய காலத்துக்கு முன்னர் தேர்தல்களை நடத்தினார்கள்என்றகுற்றச்சாட்டுஉள்ளதே தவிர தேர்தலை பிற்போட்டார்கள் என்ற குற்றச்சாட்டு ஏதும் கிடையாது.

தேர்தலைப் பிற்போடுவது ஜனநாயக கொள்கைக்கு முரணானது. தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த கட்சி என்றரீதியில் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட தயாராக உள்ளோம். நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை. – என்றார்.

# ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார் ஜேர்மன் எம்.பி. பீட்டர் ராம்சோர்

ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் ராம்சோர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார்.

ஜேர்மன்-இலங்கை இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பீட்டர் ராம்சோர் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

பீட்டர் ராம்சரை மிகவும் அன்புடன் வரவேற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரு நாடுகளுக்கும் இடையிலான கடந்த கால உறவுகளை நினைவு கூர்ந்து கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

ஜேர்மன் அரசாங்கத்தின் அனுசரணையுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக இந்த சந்திப்பில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

இலங்கையில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஜேர்மனியின் தொழில்நுட்ப உதவிகளையும் முதலீட்டையும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இது தொடர்பில் தொடர்ந்தும் உதவிகளை வழங்குமாறு கோரியுள்ளார்.

அத்துடன், இந்நாட்டில் யானை-மனித மோதலை முகாமைத்துவம் செய்வதற்கு ஜேர்மனி அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்களுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்த அதேவேளை, அவற்றை நடைமுறைப்படுத்தியமைக்கு பீட்டர் ராம்சோர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

மேலும், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலம் இலங்கை மாணவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆதரவை எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# இந்திய கிரிக்கெட் சபை தெரிவுக்குழு தலைவரின் வீடியோவால் பரபரப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழுத் தலைவர் சேத்தன் சர்மா தனியார் தொலைக்காட்சிக்கு அளித்தப் பேட்டி யில் கங்குலி – கோலி மோதல், இந்திய அணி தேர்வு, வீரர்களின் உடல் தகுதிக்கு ஊக்க மருந்து எடுத்தது குறித்து பேசி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

பிசிசிஜ தலை வராக இருந்த கங் குலி – கோலி இடையே மோதல் கள் இருந்து வந்த தாக ஊடகங்களில் கடந்த சில ஆண்டுகளாகவே செய்திகள் வெளியாகின.

அதனை உறுதி செய்யும் வகையில் கோலி தனது கேப்டன் பதவியை ராஜினாமா செய்து இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தார்.

இந்தச் சூழலில் தனியார் தொலைகாட்சிக்கு சேத்தன் சர்மா அளித்த ரகசிய பேச்சு தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அதில் சேத்தன் சர்மா கூறியதாவது, கங்குலிக்கு விராட் கோலியின் போக்கு பிடிக்கவில்லை. கோலியும் கங்குலியும் இணக்கமாக இருந்ததில்லை. அதேவேளையில் ரோஹித் சர்மாவை கேப்டனாக்கவும் கங்குலி விரும்பவில்லை. கோலி கிரிக்கெட்டைவிட தன்னை பெரிய ஆளாக நினைத்தார். மேலும் அவர் பிசிசிஜ யுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிக்கவில்லை. அவர் இல்லையென்றால் இந்திய கிரிக்கெட் இருக்காது என்று நினைத்தார். ஆனால் அவ்வாறு நடந்ததா? அவர் சென்ற பிறகும் பல இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடினர்.

20 – 20 கேப்டன் பதவியை கோலி ராஜினாமா செய்யும்போது, நீங்கள் யோசித்து முடிவெடுக்கலாம்.. உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்யலாம் என்று கூறினோம். கங்குலியும் கேப்டன் பதவியை ராஜினாமா செய்ய வேண்டாம் என்று கூறினார். ஆனால் கோலி பிசிசிஜ எந்த வாய்ப்பையும் தனக்கு வழங்கவில்லை என்றுஊடகங்களிடம் கூறினார். இதனால் இது பிசிசிஜ ஸவி கோலியாக வெளியில் பேசப்பட்டது. எங்களுடன்ரோஹித் சர்மா, ஹர்திக் பாண்டியா உள்ளிட்ட 5 இந்திய வீரர்கள் மிக நெருக்கமாக உள்ளனர். ஆனால் கோலி அவ்வாறு இருந்ததில்லை. இதுவே கோலியை கேப்டன் பதவியிலிருந்துநீக்குவது எங்களுக்கு சாதகமாக இருந்தது. காயமடைந்த இந்திய வீரர்கள் சிலர் அணி யில் இடம்பெற உடல்தகுதி பெறாத நிலை யிலும், ஊக்க மருந்து எடுத்துக் கொண்டு அணிக்கு திரும்பினர். என்று பேசி இருக்கிறார். இந்த நிலையில் சேத்தன் சர்மாவின் பேச்சு அடங்கிய வீடியோ இணையத்தில் வைரலாகி வருகின்றது.






## அணியில் மீண்டும் ஷ்ரேயஸ் ஐயர்




ஆஸ்திரேலிய அணி இந்தியாவில் 4 டெஸ்டு கள், 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையா டுகி றது. டெஸ்ட் தொடர், பெப்ரவரி 9 முதல் தொடங்கு கிறது. இந்த டெஸ்டில் இந்திய அணியில் ஷ்ரேயஸ் ஐயர் மீண்டும் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளார்.

முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து விலகினார் ஷ்ரேயஸ் ஐயர். ஆஸி. அணிக்கு எதிரான முதல் டெஸ்டிலும் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து பெங்களூரில் நேஷனல் கிரிக்கெட் அகாதமியில் உடற்தகுதிச் சான்றிதழைப் பெற்ற பிறகே அவரால் இந்திய அணியினருடன் மீண்டும் இணைய முடியும்.

ஷ்ரேயஸ் ஐயர் விளையாடாத நிலையில் சூர்யகுமார் யாதவ் அவருக்கு பதிலாக அணியில் விளையாடினார். தற்போது, பெப்ரவரி 17 முதல் டில்லியில் தொடங்கவுள்ள 2ஆவது டெஸ்டில் ஷ்ரேயஸ் ஐயர் இடம்பெறுவார் என பிசிசிஜ தெரிவித்துள்ளது.




# 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தையும் கைப்பற்றியது மே.இந்தியா

ஜிப்பாப்வேக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்டில் மேற் கிந்தியத் தீவுகள், இன்னிங்ஸ் மற்றும் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் செவ்வாய்க்கிழமை வெற்றிபெற்றது.

இதையடுத்து 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை அந்த அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துப்பாட்டம் செய்த ஜிம்பாப்வே 40.5 ஓவாகளில் 115 ஓட்டங்களுக்கே 10 விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக இன்னசன்ட் காயியா மட்டும் 5 பவுண்டறிகளுடன் 38 ஓட்ட்ஙகள் அடித்திருந்தார். மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் குடாகேஷ் மோட்டி 7 விக்கெட்டுகள் சாய்த்திருந்தார்.

பின்னா தனது இன்னிங்ஸை தொடங்கிய மேற் கிந்தியத் தீவுகள், மழையால் பாதிக்கப்பட்ட திங்கள்கிழமை முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 290 ஓட்டங்களை எட்டியிருந்தது. 3ஆம் நாளான செவ்வாய்க்கிழமை ஆட்டத்தை ஜேசன் ஹோல்டா, குடாகேஷ் மோட்டி தொடாந்தனா. ஹோல்டா 3, மோட்டி 12 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, 92.3 ஓவாகளில் 292 ஓட்டங்கள் சோத்து முதல் இன்னிங்ஸை நிறைவு செய்தது மேற் கிந்தியத் தீவுகள்.

அணியின் தரப்பில் அதிகபட்மாக ராஸ்டன் சேஸ் 4 பவுண்டறிகள், 1 சிக்ஸருடன் 70 ஒட்டங்கள் சோத்திருந்தார். ஜிம்பாப்வே பௌலிங்கில் விக்டா நியாவுசி 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 177 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய ஜிம்பாப்வே, 47.3 ஓவாகளில் 173 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அணித் தலைவர் கிரெய்க் எர்வின் 4 பவுண்டரிகளுடன் 72 ஓட்டங்கள் சோத்ததே அதிகபட்சமாக அமைந்தது. மேற்கிந்தியத் தீவுகள் பௌலாகளில் குடாகேஷ் மோட்டி 6 விக்கெட்டுகள் சாய்த்து அசத்தினார். இந்த ஆட்டத்தில் மொத்தமாக 13 விக்கெட்டுகள் வீழ்த்திய அவரே ஆட்டநாயகன் ஆனார். தொடா முழுவதுமாக 19 விக்கெட்டுகள் சாய்த்ததன் அடிப்படையில் 'தொடாநாயகன்' விருதும் வென்றார்.

# டெஸ்டில் 100 புஜாரா புதிய மைல் கல்



இந்தியாவில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடங்கவுள்ள ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் ஆட்டம் அந்த அணி வீரர் புஜாரா விளையாட உள்ள 100வது டெஸ்ட்.


இந்திய அணியின் மூத்த வீரர்களில் ஒருவர் புஜாரா. டெஸ்ட் அணியில் முன்னணி துடப்பாட்டக் காரரா சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார். இதுவரையில் இந்திய அணிக்காக 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 7,021 ரன்கள் குவித்துள்ளார். இதில் 19 சதங்கள் மற்றும் 34 அரை சதங்கள் அடங்கும். டெஸ்ட் கிரிக் கெட்டில் இவரது துடுப்பாட்டச் சராசரி 44.45. மொத்தம் 15,797 பந்துகளை எதிர்கொண்டுள்ளார்.

டெல்லி போட்டியில் விளையா டுவதன் மூலம் இந்திய அணிக்காக 100 டெஸ்ட் போட்டிகளில் விளையா டிய 13ஆவது இந்தியர் என்ற சாதனையை அவர் படைக்க உள்ளார். கடந்த 2010இல் இதே ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக அறிமுக வீரராக டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடத் தொடங்கினார். இக்கட்டான சூழலில் அணியின் மீட்பராக செயல்பட்டு விளையாடும் திறன் படைத்தவர். களத்தில் எதிரணி யால் சிறப்பாக வீசப்படும் பந்தை அறிந்து அதை ஆடாமல் அப்படியே பின்னோக்க விட்டுவிடுவதில் தேர்ந் தவர்.

இந்திய அணிக்காக டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன்களை எடுத்த வீரர்களில் 8வது இடத்தில் உள்ளார். இந்திய அணி, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பார்டர்– கவாஸ்கர் கோப்பையை தக்கவைக்க இவரது திறன் மிகவும் முக்கியம். ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 21 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,900 ஓட்டங்களை சேர்த்துள்ளார். 5 சதங்கள் மற்றும் 10 அரைசதங்கள் இதில் அடங்கும். ஆஸ்திரேலியா வுக்கு எதிராக அவரது துடுப்பாட்டச் சராசரி 52.77.

# பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்பது அவருக்கு அவமரியாதை

## சட்டதரணி துரைசாமி கருத்து



இவ்வளவு நாள் மறைமுகமான வாழ்க்கையை பிரபாகரன் வாழ்ந்தார் என்று சொல்லுவது அவருக்கு அவமரியாதையை உண்டாக்குவதற்கு தானே தவிர நல்ல எண்ணத்தில் இல்லை என சட்டதரணி துரைசாமி தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் மரணம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் –

பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்ற செய்திக்கு பின்னால் இந்தியாவின் உளவுத் துறையும் பாரதிய ஜனதா கட்சியின் தலைமையும் சதி செய்துள்ளனர். அந்த சதியின் அடிப்படையில்தான்பிரபாகரன் இப்போதுஉயிருடன் இருக்கிறார் என சொல்லப்பட்டு வருகின்றது.

பாஜக உடன் பழ.நெடுமாறன் விலை போய்விட்டார். அதனுடன் இணைந்துவிட்டார் என்பதே இந்த பொய்யின் அடிப்படைக் காரணம்.

இவ்வளவு நாள் மறைமுகமான வாழ்க்கையை பிரபாகரன் வாழ்ந்தார் என்று சொல்கின்றமை அவருக்கு அவமரியாதையை உண்டாக்குவதற்கு தானே தவிர நல்ல எண்ணத்தில் இல்லை.

இவ்வளவு நாள் இலங்கை மக்கள் கஷ்டப்படும் போது அவர் எங்கோ சொகுசு வாழ்க்கை வாழமாட்டார். களத்துக்கு வந்திருப்பார்.

இறுதி நாள் யுத்தத்தில் மற்ற தலைவர்கள் எல்லாம் அதாவது பொட்டு அம்மன், அகிலன் எல்லோரும் இறந்த பிறகு நடேசன் தூதுவராக வெள்ளை கொடி ஏந்திக்கொண்டு சென்ற வரையும் இலங்கை அரசாங்கம் சுட்டு கொன்றது.

பிரபாகரனின் மகன் விமானத்தில் சென்ற போது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு அவரும் இறந்துவிட்டார்.

இதன் பின்னர் தலைவர் நேரடியாக களத்தில் இறங்கினார். இதற்கமைய மாவீரர் பிரபாகரன் 2009.05.18 அன்று வீர மரணம் எய்தினார்.

திராவிடகலக்கத்துக்குஎதிராகபிரபாகரனை வைத்து இந்தியாவின் உளவுத்துறையும் பாரதி ஜனதா கட்சியின் தலைமையும் இன்னும் சில தலைவர்களும் இணைந்து செய்த சதியாகவே நாங்கள் இதைப் பார்க்கின்றோம். மற்றபடி பிரபாகரனுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

மேலும் அப்போதே அவர் இறக்கவில்லை என பலர் கூறினார்கள். பிரபாகரனை நன்கு அறிந்த யாரும் அப்படி சொல்ல மாட்டார்கள். அவர் இயற்கையாகவே போர் குணம் நிறைந்த ஒருவர். மறைந்து வாழ வேண்டிய அவசியம் அவருக்குக் கிடையாது.

அந்த காலத்தில் பிரபாகரன் மீது சென்னையில் இரண்டு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. அதில் ஒன்று ராஜீவ் காந்தி வழக்கு அதில் 26 ஆவது குற்றவாளியாக பிரபாகரன் சேர்க்கப்பட்டு பூந்தமல்லி நீதிமன்றில் வழக்கு நடந்தது.

பிரபாகரனை கைது செய்யும் நடவடிக்கை தோல்வியுற்ற பின்னர் அவரது தளபதி பொட்டம்மன், அகிலா மற்றும் பிரபாகரன் மீதான வழக்குகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டன.

அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் வழங்கிய மரண சான்றுதலுக்கமைய அந்த வழக்கு 25.10.2010 ஆம் ஆண்டு முடித்து வைக்கப்பட்டது.

இதனை அடிப்படையாக கொண்டு அவர் மீதான வழக்குகள் அனைத்தும் முடித்து வைக்கப்பட்டன.

அவர் மீது தற்போது எந்த வழக்கும் கிடையாது. அவருடைய இறப்பு சான்றிதழ் சென்ஸ் நீதிமன்றத்தில் இருக்கின்றது அவர் இருக்கிறார் என்பது பொய் பிரசாரம்.

1952 இல் இருந்து பாரதி ஜனதா கட்சி இலங்கையர்களுக்கு எதிராகத் தான் செயற்பட்டது. ராஜீவ் காந்தி கொலையை மையமாக கொண்டு பலருடன் இணைந்து இலங்கைக்கு எதிராக செயற்பட்டவர்கள் இப்போது ஏன் இலங்கைக்கு சென்று வந்தனர்.

இலங்கைக்கு சென்று வந்ததும் இப்படி ஒரு பொய்யான கருத்தை கூறுகிறார்கள்.

பாரதி ஜனதா கட்சி இந்தியாவில் வளர வாய்ப்பில்லை. அதனால் தான் பிரபாகரன் எனும் இந்த ஆயுதத்தை எடுத்து இலங்கையர்களுக்கு ஆதரவளிப்பது போல் காட்டுகிறார்களே தவிர அவர்கள் கூறும் விடயத்தில் எந்த உண்மையும் இல்லை.

# லண்டனில் சந்திரிகாவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பு!



லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளமைக்கு தமிழ் மாணவர் அமைப்புகள் பல எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இலங்கையின் 75 ஆவது ஆண்டு சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் இந்த நிகழ்வு, 'சிலோன் டு ஸ்ரீலங்கா: தேசத்தில் ஒரு பயணம்' என்ற தலைப்பில் வியாழக்கிழமை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கவிருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த அழைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் இளையோர் அமைப்பு பல்வேறு மாணவர் அமைப்புகளின் கையெழுத்தோடு கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை அழைப்பதற்கு பல காரணங்களை முன்வைத்து அமைப்புக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

அந்த வகையில், 1995 கடற்படைத் தேவாலய குண்டுவெடிப்பு, 1995 நாகர்கோவில் பள்ளி படுகொலை, 1996 குமாரபுரம் படுகொலை, 1998 தம்பலகாமம் படுகொலைகள் மற்றும் 1999 புதுக்குடியிடுப் படுகொலை உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான பல அட்டூழியங்களை மேற்கோள் காட்டியுள்ள மாணவர் சந்திரிகாவை அழைத்திருப்பதை கடுமையாக கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

# தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்ய தீர்மானம்!

## அரச மருந்தாளர் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் பதிவு செய்யப்படாத மற்றும் தரம் குறைந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன என அரசாங்க மருந்தாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சங்கத்தின் உறுப்பினர் அஜித் தென்னக்கோன் இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

தடுப்புப்பட்டியலில் உள்ள இந்திய மருந்து நிறுவனங்களிடம் இருந்து தரம் குறைந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும் இந்த தவறை சரி செய்யுமாறு அரசை வலியுறுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, இலங்கை சந்தைக்கு மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கையால் அங்கீகரிக்கப்படாத இந்திய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளார். எனினும் அனைத்து குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்துள்ளார்.

# போலியான விலை மனுகோரல் சமூக ஊடகங்களில் பரவுகிறது!

## துறைமுக அதிகாரசபை அதிகாரி எச்சரிக்கை

துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான 1,121 வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்கான போலியான விலை மனுகோரல் பத்திரமொன்று (ரெண்டர்) சமூக ஊடகங்களில் பரவி வருகின்றமை தொடர்பாக எச்சரிக்கையாக இருக்கும்படி துறைமுக அதிகார சபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவ்வாறான எண்ணிக்கையிலான வாகனங்களைவிற்பனைசெய்வதற்கான விலை மனுகோரல் பத்திரம் விடுவிக்கப்படவில்லை என்றும், அந்த ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள காகிதத் தலைப்பு (லெட்டர் ஹெட்) போலியானதொன்றாகும். அத்துடன், அவ்வாறு கையொப்பமிடப்பட்ட நபர் அத்தகைய ஆவணத்தில் கையொப்பம் இடவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.02.2023 இல் வெளியிடப்பெற்றது.